# இனி எல்லாம் சுகமே!

— சுமதி மோகன்

மார்கழி மாதத்தின் விடியலே ஒரு சுகம். ஜில்லென்று எங்கும் [illegible] போல். [illegible] கொட்டிக்கிடக்கும் [illegible] சூரியனுக்கு கிடைத்த நேரம் [illegible] போல் கொஞ்ச நாள் விடுதலை. இந்த ஒரு மாதம்தானே சென்னையிலும் குளிரும். இலை துளி, புல் துளி, பூவிதழ்கள் எல்லா வற்றிலும் பனித்துளிகள். தோட்டம் உடல் மட்டுமல்ல மனமும் குளிர்ந்து சிலிர்க்கும்.

வள்ளியம்மாவுக்கு மார்கழி மாதம் என்றால் குஷி. அவள் வேலை செய்யும் வீடுகளில் வாசலடைத்து கோலம் போடுவதென்றால் ரொம்பப் பிடிக்கும். அதிலும் மாணிக்கம் அய்யா வீட்டில் கோலம் போடுவது என்றால் அல்வா சாப்பிடுவது மாதிரி. இங்கே குடியிருப்பவர்கள் அவள் போடும் கோலத்தை பார்த்து ரசிக்கும் ரசனை உள்ளவர்கள். சீக்கிரம் கோலத்தைப் போட்டு விட்டு தெருக்கோடி பெருமாள் கோவிலுக்குச் சென்றால் அங்கே [illegible] சத்தமான நெய் மணத்துடன் பொங்கல் கிடைக்கும். அதன் ருசி வேறு எந்த ஓட்டலிலும் கிடைப்பதில்லை.



அப்புறமா சொல்லலாம்"
"சரி மாமு..." என்றாள் கவிதா.

✱✱✱✱

**3**

**மா**ணிக்கம் அய்யா. அவர் மனைவி சிவகாமிக்கு இரண்டு மகன்கள், ஒரே மகள். மகன்கள் இருவரும் அமெரிக்காவில் உள்ளனர். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வந்து பதினைந்து நாட்கள் தங்கிச் செல்வர். மகள் துபாயில் வருடத்திற்கு ஒருமுறை வருவாள். அய்யாவுக்கு எழுபத்தைந்து வயது. அய்யா எப்பவும் வேஷ்டியும் கதர் பனியனும்தான் அணிவார். இந்த வீடு அவர் வாங்கி பல வருடங்கள் ஆகிறது. அய்யா பெயரில் இரண்டு டாக்ஸி, மூன்று ஆட்டோ ஓடுகிறது. ஊரில் நிலம் வேறு. செல்வத்திற்கு பஞ்சமில்லை.

பழைய வீடுதான். ஆனால் அய்யா நன்றாக பராமரித்து வந்தார். கீழே ஆறு போர்ஷன்கள். நான்கு போர்ஷன்கள் சமையல் அறை, ஹால், ஒரு சின்ன படுக்கை அறை கொண்டது. இரண்டு போர்ஷன்கள் சமையலறை, அட்டாச்டு பாத்ரூமுடன் கட்டில், மெத்தை, அடுப்பு சில பாத்திரங்கள் என்று சகல வசதிகளுடன் பேச்சிலர்களுக்காக வைக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த இரண்டு அறைகளும்தான் காலியாக உள்ளது.

மாடி முழுக்க அய்யாவும் அம்மாவும்தான். அய்யா கொஞ்சம் முன்கோபி. ஆனால் இனிய மனசு. அம்மாவுக்கு மாலினி குடும்பத்தை ரொம்பப் பிடிக்கும். அதுவும் மாலினியை ரொம்பவே பிடிக்கும். அவள் அவர்களின் வங்கி வேலை மற்றும் பல வேலைகளை பொறுப்பாக செய்து கொடுப்பாள்.

மாடிக்கு சென்றதும் மாலினி, "அய்யா இது என் பிரண்ட் கவிதா" என்றாள்.

அய்யா அவளை ஏற இறங்கப் பார்க்க, கவிதா பெரியவர்கள் இருவரின் காலை தொட்டுக் கும்பிட்டாள். அவள் தமிழ் பெண் இல்லை என்பதை தோற்றத்தில் உணர்ந்த அய்யா,

"அடடா இருக்கட்டும்மா... நல்லா இரு" என்று வாழ்த்தினார். "தமிழ் தெரியுமா?..."

"நல்லாத் தெரியும் அய்யா" என்றாள் கவிதா.

அவள் காட்டிய மரியாதையிலும், அவள் பேசிய தமிழிலும் நெகிழ்ந்துப் போனவர் "எந்த ஊரம்மா உனக்கு?" என்றார்.

"மும்பையில் இருந்து வந்திருக்கிறாள் அய்யா... சென்னையில வேலை கிடைத்திருக்கிறது"

"சந்தோஷம், உக்காரும்மா... சிவகாமி பாப்பாக்கு காபி கொண்டு வா" என்றார்.

அதற்குள் மாலினி "வேணாம் அய்யா. இவளுக்கு நீங்க ஒரு உதவி பண்ணனும். அதுக்காகத்தான் வந்திருக்கோம்" என்றாள்.

"என்னம்மா?"

"அய்யா... கீழே ஸ்டுடியோ ரூம் இருக்கு இல்ல... அதை இவளுக்கு வாடகைக்கு குடுக்கணும். என்னா இவ அப்பா, அம்மா இப்ப வர மாட்டாங்க. அவங்களுக்கு மும்பையில வேலை இருக்கு. இவளுக்கு ஊரும் புதுசு. அதான் என் பக்கத்தில இருக்கணும்னு..."

"போர்ஷன் காலியாத்தான் இருக்கு. குடுக்கறதப் பத்தி ஒன்னும் இல்ல. உன் பிரண்டுனா கவலை இல்லை. ஆனா... வாடகை, அட்வான்ஸ்..." என்று அவர் இழுக்க,

"அதெல்லாம் சரியா குடுப்பேன் அய்யா" என்றாள் கவிதா.

உடனே சிவகாமி அம்மா, "அப்புறம் என்ன, பாப்பாதான் தரேங்குதே. அதுவும் மாலினி சிபாரிசின்னா இதில யோசிக்க என்ன இருக்கு?" என்று வக்காலத்து வாங்கினார்.

"அது சரி... மாலினி சிபாரிசின்னா அதுக்காக வீட்டை ஓசியா குடுக்க முடியும்? இதப்பாரும்மா கவிதா, வாடகை மூவாயிரம், பத்து மாச வாடகை அட்வான்ஸ். கரண்ட் மற்றும் தண்ணிக்கு தனி. மாசம் பொறந்தா அஞ்சு தேதிக்குள்ள வாடகை வந்துடணும். இல்லன்னா வீட்டை உடனே காலி பண்ணணும். என்ன சரியா?..."

கவிதா தன் கைப்பையை திறந்து முப்பதாயிரம் ரூபாயை எடுத்து அவர் கையில் கொடுத்தாள்.

"அய்யா, எனக்கு இங்க ஒரு [illegible] வேலை. வாடகை எனக்கு பிரச்சினை இல்லை" என்றாள்.

"அம்மா, நீ போர்ஷனைப் பார்க்க வேண்டாமா? அதுக்குள்ள அட்வான்ஸை எடுத்துக் குடுத்துட்டே..."

"அய்யா... மாலினி வீட்டை நான் பார்த்தேன். அதுவே போதும். நான் தனியாக இருப்பதால் எனக்கு பாதுகாப்பும் அவசியம்."

"சரிம்மா... சிவகாமி சாவியை எடுத்து அவங்கிட்ட குடு. பாப்பா நாளைக்கு நல்ல நாள் பொறந்துடும். அதுவரை நீ மாலினி வீட்டிலேயோ, இல்லை எங்க வீட்டிலேயோ தங்கிக்கோ. நாளை பால் காய்ச்சிட்டு போகலாம்" என்றார் அய்யா.

"ஏன்... இப்ப பாலே காய்ச்சக் கூடாதா?" என்று புரியாமல் கவிதா கேட்க,

சிரித்தபடி மாலினி அவளுக்கு இங்குள்ள பழக்கவழக்கங்களை கூறினாள்.

பெரியவர்களை மீண்டும் ஒருமுறை கவிதா வணங்க,

"நீ எப்ப வேணா நம்ப வீட்டுக்கு வந்து போகலாம்மா" என்று வாஞ்சையுடன் அவளிடம் சொன்னார் சிவகாமி.

சொல்லொணாத நிம்மதியுடன் தோழியுடன் திரும்பினாள் கவிதா.

✱✱✱✱

**4**

**பு**திய ஊர், புதிய சூழ்நிலை, புதிய மனிதர்கள் என்று எல்லாம் புதியதாகவே இருந்தாலும், மாலினி குடும்பமும், அங்கு இருக்க மற்ற குடித்தனக்காரர்களும் தன்னிடம் செலுத்திய அன்பு, கவிதாவை பத்தே நாட்களில் மும்பையை மறக்கச் செய்தது.

என் என்றால் என்னவென்பதா[illegible] [illegible]. இரவில் தன்னுடன் துணையாக படுத்துக் கொள்ளும் மாலினியோ அல்லது

---




சில மலர்களைப் பார்த்தாலே உள்ளம் பூக்கும். முகமும் அந்த மலர்களைப்போல மலரும். பார்க்க பார்க்க பரவசம் ஏற்படும். நீங்கள் வானில் மிதந்து குதூகலிக்க வேண்டுமா? வாருங்கள் துலிப் நகருக்கு. இந்த ஏராளமான துலிப் மலர்கள் பல்வேறு விதமான வண்ணவண்ண நிறங்களில் நம்மை வரவேற்று வர்ணஜாலம் படைக்கின்றன.

நம்மை மகிழ்விக்க எத்தனையோ திருவிழாக்கள் அங்கு காத்திருக்கின்றன. அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் ஏப்ரல், மே மாதங்களில் துலிப் மலர் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இந்த மலர்த்தோட்டத்துக்குள் புகுந்து விட்டாலே போதும். மனதை மட்டுமல்ல உடலையும் குளிர வைத்து விடுகின்றன.

ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் மலர் திருவிழா அந்த மாதம் முழுக்க கொண்டாடப்பட்டு, மே மாதமும் பல்வேறு பொழுதுபோக்கு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இதில் நீங்கள் எந்த நிகழ்ச்சியில் பார்க்க வேண்டும் என்று இணைய தளத்தில் தேடினால், ஏராளமான தகவல்களை கொட்டி விடுகின்றன. வசதி இருந்தால் பொழுது போக்க உகந்த இடமாக இவை.

- [illegible]

அவளின் தங்கைகளோ அவளை தங்களை ஆட்கொள்ளாமல் பார்த்துக் கொண்டனர். முதலில் விலகி இருந்த பாலகரும், பின்பு தன் இளைய சகோதரிகளைப் போல "அக்கா, அக்கா" என்று அவளுக்கு எந்த உதவியும் செய்ய தயாராகி நின்றான்.

மருத்துவமனை வேலையும் அவளுக்கு திருப்தியைத் தந்தது. அங்கு சாரதா என்ற நல்ல சிநேகிதியின் துணையும் கிடைத்தது. சில நாட்களிலேயே அவள் சென்னைவாசியாகவே மாறி விட்டாள். தமிழையும் நன்றாக பேச ஆரம்பித்து விட்டாள். மருத்துவமனையில் பல தரப்பட்டவர்களின் சந்திப்பு அவளுக்கு ஒரு நல்ல அனுபவத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுத்தது.

நாட்கள் ஓடியதே தெரியவில்லை. இப்போதுதான் சென்னை வந்தது போல் இருந்தது... அதற்குள் இரண்டு மாதம் ஓடி விட்டது. அம்மாவின் ஒரு ஆட்டோவே மாத வாடகையில் வேலைக்குப் போக வர ஏற்பாடு செய்தாகிவிட்டது.

மருத்துவமனையிலும் இவளுக்கு நல்ல பெயர். எல்லோர் வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு சிரித்த முகத்துடன் செய்பவளைக் கண்டால் யாருக்குத்தான் பிடிக்காது? அதுவும் இவளுக்கு ஆங்கிலம், இந்தி, தமிழ் என்று தெரிந்திருந்ததால் வடமாநிலங்களிலிருந்து வரும் நோயாளிகளுடன் உரையாட வசதியாக இருந்தது. மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகள் இவளுக்கு வேலை உண்டு. அதற்கு பதில் அந்த வாரம் வெள்ளி விடுமுறை.

✻✻✻✻

ஒருநாள் மாலினியுடன் மருத்துவமனைக்கு வந்தவள்.. அவள் போவதைப் பார்த்தபடி படிக்கட்டுகளில் ஏற கதவருகில் நின்றிருந்தவன் மீது மோதினாள். திரும்பி சுதாரித்து,

"ஐம் சாரி... வெரி சாரி... இட்'ஸ் மை பால்ட்... ரியலி சாரி..." என்று தடுமாறினாள்.

"போதும் மிஸ்... (அவள் ஐடி. கார்டில் அவள் பெயரைப் பார்த்து) சுசிதா... எல்லா சாரியும் எனக்கே சொன்னா எப்படி? கொஞ்சம் பாக்கி வச்சிக்குங்க"

அவன் சொன்னது புரியாமல் அவனைப் பார்க்க,

"திரும்ப யார் மேலேயாவது மோதினால் சொல்றதுக்கு சாரி வேண்டாமா..." என்று அவளைப் பார்த்தவன் அவள் அழகு குழந்தைப் போன்ற சிரிப்பில் ஒரு நிமிடம் மயங்கி, பின் சுதாரித்து தன் கையை நீட்டி,

"ஐம் கார்த்திக். குழந்தைநல நிபுணர்..." என்றான்.

இவளும் தன் கரத்தை நீட்டி குலுக்கி,

"அதான் நீங்களும் குழந்தைப் போல இருக்கீங்க" என்றவள், தான் அதிகமாக பேசி விட்டோமோ என்று நாக்கை கடித்து,

"சாரி நா சுசிதா... அட்மின்ல மேனேஜர்" என்றாள்.

"திரும்ப சாரியா... ஓகே வி வில் மீட் சம் அதர் டைம் ஹேவ் எ குட் டே மிஸ் சாரி..." என்று குறும்பு சிரிப்புடன் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

"தாங்க்ஸ்" என்று அவன் போன திசையிலேயே பார்த்துக் கொண்டிருந்தவள், 'ஹேண்ட்ஸம்மா, அந்தக் கால மில்ஸ் அண்ட் பூன் கதைகளில் வரும் ஹீரோவைப் போல இருக்கானே' என்று நினைத்து பின் தலைக்குத்தானே ஒன்று போட்டுக் கொண்டு தன் அறையை நோக்கி நடந்தாள் அவள்.

"என்ன சுசி... எங்கே ஞாபகம் உனக்கு? நம்ம ரூமைத் தாண்டிப் போறே?..." என்ற சாரதாவின் குரல் அவளை இந்த உலகத்துக்கு அழைத்து வந்தது.

"அது சாரு... அது... குட் மார்னிங்..."

"போதும் வழிந்தது...."

"சாரு... யார் அது டாக்டர் கார்த்திக்?"

"ஓஹோ... இப்ப புரிஞ்சிடுச்சி. நீ பாதை மாறியதன் காரணம்...."

"சேசே... அதெல்லாம் ஒன்னுமில்லை. அவர் மேல மோதிட்டேன் அதான்."

"மோதலில் தான் காதல் துவங்கும் என் இனிய சகியே... எனிவே அவர் இந்த ஆஸ்பிடலில் குழந்தைகள் எல்லாம் விரும்பும் குழந்தைநல நிபுணர். டிரெயினிங்கிற்காக அமெரிக்கா போயிருந்தார். இன்னிக்கு ஜாயின் பண்ணிருக்கிறார்... போதுமா அவரைப் பற்றிய விஷயங்கள்... இப்ப நீ என்ன பண்ற. அவரோட கன்சல்டிங் அறைக்குப் போய் அவரோட ஷெட்யூல் வாங்கிட்டு வா.... அதை ரெடி பண்ண நாளாவது ஆகும்..."

"நானா?"

"ஆமாம், எனக்கு ஆடிட்டரோட மீட்டிங் இருக்கு..." என்று அவள் கிளம்பி ஓட, சுசிதா ஒரு பேடையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு நேரே கார்த்திக் அறைக்குச் சென்றாள்.

மூடியிருந்த கதவை லேசாக தட்டி "உள்ளே வரலாமா?" என்று வினவ,

"யெஸ் கமின்...." என்றான் அவன்.

உள்ளே சென்றதும் இவளை அடையாளம் கண்டு கொண்டு ஆச்சரியத்துடன் சிரிக்க, இவளே முந்திக் கொண்டு,

"சார் நான் மிஸ் சாரி... சுசிதா... உங்க டோட்டல் ஷெட்யூல் வேணும்" என்றாள்.

"உட்காருங்க சுசிதா. காலை ஒன்பது மணியிலிருந்து பன்னிரெண்டு மணி அப்புறம் மாலை ஐந்திலிருந்து எட்டு... ஒரு பேஷண்டுக்கு இருபது நிமிஷம் கொடுக்கணும். புது கேஸ்னா ரெண்டு அப்பாயின்ட்மென்ட் டைம் ஒதுக்குங்க. சனி, ஞாயிறு மாலை நோ அப்பாயின்ட்மென்ட்... ஓகே. இது என்னோட புது செல் நம்பர். வெள்ளிக்கிழமை மாலை அப்புறம் எப்ப வீட்டிலேர்ந்து போன் வந்தாலும் உடனே கனெக்ட் பண்ணணும். இஸ் தேட் க்ளியர்?"

"யெஸ் சார்...." என்று எழுந்தாள்.

"உட்காருங்க சுசிதா... நீங்க புதுசா? நா இதுக்கு முன்னால உங்களை பார்த்ததில்லை... நீங்க நார்த் இண்டியனா... எந்த ஊர்?"

"நான் ஜெய்ப்பூரிலேர்ந்துதான் சேர்ந்தேன் சார்... என் ஊர் மு... போபால்"

"அது என்ன போபாலுக்கு இனிஷியல் எல்லாம் இருக்கா?"

"சாரி சார்." என்றவள் தன் தவறை உணர்ந்து நாக்கை கடித்துக் கொண்டாள்.

"அய்யோ ஆரம்பிச்சாச்சா உங்க சாரி... ஓகே நீங்க போகலாம். பிறகு சந்திப்போம்..." என்றான் கார்த்திக்.

அவனுக்கு நன்றி கூறிவிட்டு அறையை விட்டு வெளியே வந்தவள், 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டபடி தன் அறையை நோக்கிச் சென்றாள்.

இதன்பிறகு அவர்கள் அடிக்கடி சந்திக்கும் நிலை ஏற்பட்டது. அவன் அடிக்கடி குழந்தைகளுக்கு வரும் நோய்களைப் பற்றி விளக்க வொர்க் ஷாப்கள் நடத்துவான். அதற்கெல்லாம் ஏற்பாடு தயாரிப்பது, பெற்றோர்கள் வந்தால் அவர்களை வரவேற்று அமர செய்வது என்று பல உதவிகளை செய்வாள் சுசிதா. எல்லாவற்றையும் நல்ல முறையில் தவறாமல் செய்து தனக்கு உதவுவது, எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பது என்று அவனுக்கும் அவளை ரொம்பவே பிடித்து விட்டது.

✻✻✻✻

## 5

இன்று ஞாயிற்றுக் கிழமை. சோம்பலுடன் எழுந்து குளித்து விட்டு வந்து தேதி கிழித்தால் மார்ச் இருபது. 'ஓ... இன்று என் பிறந்த நாள்.' உடனே அம்மா ஞாபகம் வர, அழுகை பீறிட்டு வந்தது. சுசிதாவின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அம்மா ஏதாவது சர்ப்ரைஸ் பரிசு வாங்கி வைப்பாள். இவளுக்கு பிடித்த மால்புவா, ரபடி என்று செய்து கூட கொடுப்பாள். இவளும் அன்று முழுவதும் அம்மாவை விட்டு நகரவே மாட்டாள்.

"அம்மா..." என்று வாய் விட்டு அழுதாள்.

'அம்மாவிடம் சொல்லாமல் வந்து விட்டோமே. அவள் உடல்நிலை எப்படி இருக்கோ? என்னைத் தேடி அலைந்திருப்பாளோ? நான்தான் கங்கையில் விழுந்து இறக்கப் போவதாக லெட்டர் எழுதி வைத்துவிட்டு வந்தேனே. அங்கே போய் தேடி இருப்பாளோ? நாம் அவசரப்பட்டு விட்டோமோ? ஆனால் என் சொல்லை கேட்கும் நிலையில் அவள் இல்லையே'

என்றெல்லாம் எண்ணியபடி தன் பெட்டியை திறந்து அதில் இருந்த அம்மாவின் புடவையில் முகத்தைப் புதைத்து கதறி அழுதாள்.

நல்லவேளை அறையில் வேறு யாரும் இல்லை. செல்போனை எடுத்து தன் வீட்டு எண்களை அழுத்த ஆரம்பித்தவள், 'ஐயோ... மீண்டும் மீண்டும் தவறு செய்கிறோமே' என்ற எண்ணம் வர போனை வைத்துவிட்டு பேசாமல் படுத்துக் கிடந்தாள்.

எவ்வளவு நேரம் இருந்தாளோ தெரியாது. வாசல் கதவை தட்டும் சத்தம் கேட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்து கதவைத் திறந்தாள்.

"ஹேப்பி பர்த்டே டூ யூ! பிறந்த நாள் வாழ்த்துகள்" என்றபடி மாலினி வீட்டினர் அப்பா, அம்மாவுடன் வந்து நிற்க சுசிதாவுக்கு நம்பவே முடியவில்லை.

"நான்தான் சொன்னேனே. என்ன குட்டிப் பாப்பா அம்மா ஞாபகம் வந்து அழுறியா? வா வா... நாங்க இல்லையா உனக்கு?" என்று மாலினி கூட மனம் நெகிழ்ந்து அவனை அப்படியே அணைத்துக் கொண்டாள் கவிதா.

"தாங்க்ஸ் மாலினி" என்றான்.

அனைவரும் அவனுக்கு பால், தலை கோதி, பிள்ளையார் பொம்மை போன்ற குட்டி குட்டி பரிசுகள் தர, அவன் அவர்கள் அன்பில் திக்குமுக்காடிப் போனான்.

மாலினி அவனை தன்னுடன் கோவிலுக்கு அழைத்துச் சென்று விட்டு, அப்படியே ஓட்டலில் விருந்தும் கொடுத்தாள்.

மாலையோடு புத்தகம் படித்துக் கொண்டிருந்த போது, பக்கத்து போர்ஷன் சேகர் சத்தமாக தன் பத்து வயது மகன் சரணை திட்டிக் கொண்டிருந்தான். சேகரின் மனைவி புவனா,

"எதுக்கு பிள்ளையை திட்டறீங்க... அவன் ட்யூஷன் டீச்சர் வேற மாறிப் போயிட்டாங்க... அதுக்கு அவன் என்ன பண்ணுவான்?" என்றாள்.

சேகர் - புவனா தம்பதியர் இருவருக்கும் அரசாங்க வேலை. சரண் ஐந்தாம் வகுப்பு, அவன் தங்கை சந்தியா மூன்றாம் வகுப்பு படிக்கிறார்கள்.

"அது சரி... இத்தனை நாள் டீச்சர் சொல்லிக் கொடுத்தது மறந்து போயிடுமா? எப்படி பெயில் ஆகலாம்?" என்று சரணை அடிக்க, அவனோ அழுதபடி வெளியே ஓட... மனம் தாள முடியாமல் கவிதா வெளியே வந்தாள்.

"புவனா அக்கா... என்ன ஆச்சு?" என்று கேட்டாள்.

"இவனோட இந்தி ட்யூஷன் டீச்சர் வேற ஊருக்கு போயிட்டாங்க... இவன் இந்தியில் பெயில் ஆயிட்டான்... பக்கத்துல வேற டீச்சரு இல்லையே ட்யூஷன் வைக்கறதுக்கு..."

"அக்கா... உங்களுக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லைன்னா நான் வேணா சொல்லித் தரேன். ஆனா ராத்திரிதான் எடுப்பேன் பரவாயில்லையா?"

"அட... ஆமாம், பக்கத்து போர்ஷன்ல உன்னை வச்சிகிட்டு... நான் சரியான முட்டாள்... உனக்கு ஒண்ணும் கஷ்டமில்லையே கவி?"



"எனக்கு என்னக்கா கஷ்டம்? நீங்க அனுப்புங்க இன்னிக்கே சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கறேன்"

"ரொம்ப தாங்க்ஸ் கவி... அவங்களுக்கு முந்நூறு ரூபா கொடுத்தேன்... அது உனக்கு போதுமா?"

"இப்போ பணம் எல்லாம் வேண்டாங்க்கா" என்று கவிதா பதற,

"அப்ப ட்யூஷனும் வேண்டாம். நீ பணம் வாங்கிக்கிறதா இருந்தா ரெண்டு பிள்ளைங்களையும் அனுப்பறேன்" பிடிவாதமாக சொன்னாள் புவனா.

"சரி... ரெண்டு பேருக்கும் சேர்த்து நானூறு குடுங்க போதும்" என்றாள் கவிதா.

"என்ன ஜோராய்க் கணக்குப் போடறே?" என்று புவனா சிரித்தாள். சேகருக்கும் பெரிய நிம்மதி.

இதுபோல சின்னச் சின்னதாக பலருக்கு உதவிகள் செய்து கவிதா தன் கடந்த காலத்தை மறக்கத் தொடங்கினாள்.

✖ ✖ ✖ ✖

அதிசயமான
## இளஞ்சிவப்பு நிற ஏரி

செனகல்

நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள 'லேக்ரெட்பா' என்ற ஏரியின் நீர் கோடை காலத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் தெரிகிறது. இந்த இளஞ்சிவப்பு தண்ணீர் உப்பு நீராக உள்ளது.

இந்த ஏரியில் உள்ள கனிம பொருட்கள் கோடைகாலத்தில் வேதியியல் மாற்றம் அடைவதாலும், நுண்ணிய கிருமிகளாலும் ஏரி இளஞ்சிவப்பு நிறம் கொண்டதாக மாறு கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒரு லிட்டர் ஏரி தண்ணீரில் 380 கிராம் உப்புக்களை இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அதிசயமான ஏரியின் நிறம்தான் இளஞ்சிவப்பே தவிர, உப்பை வாரி வாரி வழங்குவதில் வற்றாத ஜீவநதியாக இது விளங்குவது ஆச்சரியமாகவே இருக்கிறது.

- கார்த்திக்.



ஒரு வெள்ளிக்கிழமை இவள் வீட்டில் தன்னிடம் ட்யூஷனுக்கு வரும் குழந்தைகளின்... ஆமாம் இப்போது குழந்தைகள் பெருகி எட்டு பேர் ஆகிவிட்டது... டெஸ்ட் பேப்பர்களை பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது பாஸ்கர் வந்து,

"அக்கா கொஞ்சம் வீட்டுக்கு வரீங்களா?" என்றான்.

"ஏன் பாஸ்?"

"அக்காக்கும் அம்மாக்கும் பிரச்சினை... அம்மா அழுறாங்க? எனக்கு ஆபீஸ்க்கு லேட்டாகுது."

"சரி... நீ போ நா வரேன்."

தன் எதிர்ப் பேர் ஒரு துப்பட்டாவை போட்டுக் கொண்டு மாலினியின் போர்ஷனுக்கு வந்தவள்,

"ஏய் மாலினி... என்ன ஆபீஸ் போகலையா? என்ன அம்மாவோட தகராறு?" என்றாள்.

கமலம்மா முந்திக் கொண்டு "நீயாவது உன் சிநேகிதிக்கு கொஞ்சம் புத்தி சொல்லு கவி" என்று அழுதபடி கூறினார்.

அம்மாவின் இருக்கத்தை குறைக்கும் வண்ணம், கவலை கொண்டு சிரித்தபடி,

"சொன்னாப் போச்சம்மா... ஏய் இங்க வா புத்தி சொல்றேன்" என்று தன் உயிர் தோழியை ஆதரவாக அணைத்தாள். "என்னடா ஆச்சு அம்மாவை அழ விட்டுட்டு இருக்கே... சொல்லுடா என்ன உன் பிரச்சினை?"

மாலினியும் தோழியை கண்டதும் கொஞ்சம் கதறினாள்.

"ஆபீஸ் போறதும் சரி... அம்மா சொல்றதைக் கேளேன். என்னை கல்யாணம் பண்ணிக்கச் சொல்றாங்க. அதை இப்பத்தான் ஆரம்பிக்கணுமா?"

"சரி நீ சொல்லு. அம்மாகிட்ட ஒரு 'சாரி' சொல்லிட்டுப் போ... மத்ததை நான் பாத்துக்கறேன்"

"சாரியா நான் என்ன தப்பு..." என்று ஆரம்பித்தவள், தன் தோழியின் முகத்தில் கோபரேகைகளைக் கண்டு,

"அம்மா, சாரிம்மா... கவியே இதைப் பத்தி பேசலாம். இப்ப எனக்கு லேட் ஆச்சு" என்று தன் ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு ஓடினாள்.

"டைட டைட மாறு... சொல்லுங்கம்மா என்ன விஷயம்?" என்றாள் கவிதா.

"கவி... நேத்து சார் வீட்டுல வந்து ஞாயிற்றுக்கிழமை அவரோட சிநேகிதரோட பையனுக்கு நம்ம மாலினியை பெண் பார்க்க வரட்டுமான்னு கேட்டாங்க. ஒரு வாரமா மாலினி ஆபீஸ்ல ஆடிட்னு லேட்டா வரா... அதனால பேசவே முடியல. இன்னிக்கு அவங்ககிட்ட பதில் சொல்லணும். அவர் நம்ம குடும்பத்துக்கு எவ்வளவோ உதவி செஞ்சிருக்காரு. பையனும் நல்லவன், குடும்பமும் தெரிஞ்ச குடும்பம். மாலினி கிட்ட கேட்டா புரியாம சத்தம் போடறா. நான் போயிட்டா நம்ம குடும்பத்தை யார் கரை ஏத்தறது அப்படி இப்படிங்கறா.

**8**

**ஞா**யிறு காலை சீக்கிரம் எழுந்து தலைவாரி சாமி கும்பிட்டு விட்டு மாடியில் உள்ள அப்பா வீட்டுக்கு சென்றாள் கவிதா.

"வாம்மா... வா வந்து இட்லி சாப்பிடு" என்று சுடச்சுட இட்லியும், மணக்க மணக்க கொத்துமல்லி சட்னியும் செல்வி அம்மா பரிமாற, கவிதாவும் நன்றாக சாப்பிட்டாள். நல்ல காபியும் வந்தது.

அறையிலிருந்து வெளியே வந்த அப்பா,

"என்னம்மா நல்லா இருக்கியா? வீடு சௌகரியமா இருக்கா? என்ன காலையிலே வந்திட்டே? என்ன விஷயம்?" என்றார்.

"இன்னிக்கு மாலினியை பெண் பார்க்க வராங்க அப்பா"

"ஆமாம் தெரியும்... கமலம்மா வந்து சொன்னாங்க"

"அலங்காரம்லாம் பண்ணிக்க மாட்டாளாம். அம்மா சொன்னாலும் கேட்க மாட்டா... நானும் ஆஸ்பிட்டல் போகணும். சாயந்திரம் சீக்கிரம் வந்திடுவேன். ஆனா அதுக்குள்ள நீங்கதாம்பா கொஞ்சம் அவளை ரெடி பண்ணணும்"

"அவ்வளவுதானே. நீ கவலைப் படாதேம்மா.. நான் பார்த்துக்கிறேன்"

"ரொம்ப தாங்க்ஸ்பா"

"அதெல்லாம் எதுக்கு? அவ நா பார்த்து வளர்ந்த பொண்ணு"

"சரிப்பா, நா போயிட்டு வரேன். வரேன்மா" என்று வேகமாக இறங்கி வந்தவள்,

மாலினியின் அம்மாவிடம் சென்று "அம்மா நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன். நீங்க டிபன், காபி, பூ பழம் எல்லாம் ஏற்பாடு பண்ணிடுங்க. என்ன பாப்பா பாத்துக்கிறியா?" என்றாள்.

"அவள் பண்ணுவாள். நீ கொஞ்சம் சீக்கிரம் வந்துடும்மா. இவ திரும்பவும் முரண்டு பிடிக்கப் போறா"

"கட்டாயம் வரேம்மா... மாலினி... நான் வரேன், அவளிடம் ரெடியா இரு... பை" என்று கிளம்பினாள்.

மருத்துவமனையை அடைந்து தன் அறைக்குச் சென்றாள். இவளைப் பார்த்தவுடன் சாரதா,

"குட் மார்னிங் மேம்" என்றாள்.

"வெரி குட் மார்னிங் சாரு... சாரு எனக்கு ஒரு சின்ன உதவி செய்யணும்..."

"உங்களுக்கா? எப்பவும் எல்லோருக்கும்



நீயே உனக்கு செய்வோ... சொல்லு சொல்லு வெட்டி வேலை உ ப்ளஷர் ஆப் ஹேப்பியில் தூ."

"ஓகே ஓகே... நா உருகிட்டேன்ட. எனக்கு இன்னிக்கு ஐந்து மணிக்கு செல்லணும். என் பிரண்ட் மாலினியை இன்னிக்கு பெண் பார்க்க வராங்க."

"ஓ இதுதானா... ஓகே டன்."

வேலையின் இடையே சரவணன் குடும்பம் நல்லவர்களாக இருந்தால், மாலினியை எப்படி சம்மதிக்க வைப்பது என்று அவள் கண்களை மூடி யோசிக்க, அங்கே வந்த சாரதா...

"ஏய்... உன்னைப் பொண்ணு பாக்கப் போறாங்களா இல்லை.. உன் பிரெண்டையா? என்ன ஸ்வீட் டிரீம்ஸா" என்றாள்.

"ம்... என்ன சொன்னே?"

"போங்கடா....."

"சாரி சாரு, ஏதோ யோசனை" என்று தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

❖❖❖❖

**9**

மாலினியின் வீட்டுக்குள் நுழைந்ததும் உள்ளே இருந்து சமையலறையிலிருந்து கேசரியின் மணமும், வெங்காயப் பக்கோடாவின் வாசனையும் சுகிதாவை ஓடி வந்து வரவேற்றது.

"வந்திட்டியா சுகி... இந்தா இந்த கேசரியை சாப்பிட்டு நல்லாருக்கா சொல்லு" என்றாள் கமலம்மா.

ருசித்து விட்டு "ஆஹா, அம்மா உங்க கை மணமே தனிதான்மா" என்று அவள் கைகளில் முத்தமிட்டுவிட்டு.

"எங்கேம்மா ஹீரோயின்?" என்றபடி உள்ளே சென்றாள்.

அங்கே இளம்நீல நிறத்தில் மைசூர் சில்க் புடவையும், அதற்கேற்றாற் போல் ஜாக்கெட்டும், நகைகள், தலையில் மல்லிகை பூ மணக்க ஒரு அப்சரஸ் போல் நின்றிருந்தாள் மாலினி. அலங்காரம் எளிமையாகவும் அதே சமயம் மிகவும் நேர்த்தியாகவும் இருந்தது.

"ஏய் மாலினி, இப்பவே கல்யாணப் பொண்ணு போல இருக்கியே!" என்று சீண்ட...

"இதோ பார்... இதெல்லாம் சிவகாமியம்மா மனசு கஷ்டப்படக் கூடாதுன்னுதான். அதுக்காக... நான் என்னவோ... கல்யாண மேடைக்கு உடனே கிளம்புவதுக்கு தயாரா இருக்கேன்னு நினைக்காதே..." என்றாள் மாலினி.

"சரி மேடம்... நான் போய் முகம் கழுவிட்டு வந்திடறேன்."

"டிரஸ் மாத்திக்கலையா?"

"பொண்ணு உன்னைத்தான் பார்க்க வராங்க என்னையில்ல..." என்றபடி தன் போர்ஷனுக்கு ஓடி தயாரானாள். மறக்காமல் சிவகாமியம்மாவுக்கு நன்றி கூறினாள்.

சரியாக ஆறு மணிக்கு நீட்டு ஏகாம்பரத்தின் குவாலிஸ் வண்டி வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து ஏகாம்பரம், அவர் மனைவி லட்சுமி, சரவணன், அவன் பெற்றோர் சுந்தரம், மீனாட்சி தம்பதியர் இறங்கினர். கமலம்மாவுடன் அம்பாவும், சிவகாமியம்மாவும் வாசலுக்கு வந்து அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

சரவணன் நல்ல உயரம். மெலிந்த உடல். ஆனால் அவன் நடை உடை பாவனையில் ஒரு கம்பீரம் இருந்தது. அறிமுகங்கள் முடிந்தவுடன், டிபன் காபியும் முடிந்தது. கமலம்மாவிற்கு லட்சுமி ஜாடை காட்ட, சுகிதா உள்ளே சென்று மாலினியை அழைத்து வந்தாள்.

மாலினி எல்லோருக்கும் கைகூப்பி வணங்கி அமர்ந்ததும் ஏகாம்பரம், "சரவணா, மாலினி தங்கமானப் பொண்ணு. இவ சின்னப் பொண்ணா இருந்த காலத்திலேருந்தே எனக்குத் தெரியும். ரொம்ப பொறுப்பானப் பொண்ணு." என்று பேசப் பேச, மாலினி பொறுமை இழந்து குறுக்கிட்டாள்.

"ஐட்டு அங்கிளுக்கு என் மீது எப்பவுமே அளவு கடந்த பாசம்... நீங்க அனுமதிச்சா எனக்கு என் குடும்ப சூழ்நிலையைப் பற்றி கொஞ்சம் சொல்லணும்....."

கமலம்மா செய்வதறியாது திகைக்க, அதற்குள் மீனாட்சி குறுக்கிட்டு பேசினார்.

"அண்ணன் சொன்னதில தப்பே இல்லைம்மா. எங்க அனுமதியை நீ கேக்கற விதத்திலேருந்தே உன் குணம் எனக்கு புரிஞ்சுபோச்சு. முதல்ல நா சொல்ல வந்ததைச் சொல்லிடறேன். எங்களுக்கு சரவணன் ஒரே மகன். நாங்கள் இருவருமே அக்கா, தங்கை, அண்ணன், தம்பி இல்லாமல் தனித்து பிறந்தவங்க. அதனால எங்க



மகனுக்காவது பெரிய குடும்பத்திலிருந்து பெண் எடுக்கணும் என்பதில் நாங்க ரெண்டு பேருமே... சரவணனும் உறுதியா இருந்தான். அப்பதான் அண்ணன் உங்க குடும்பத்தைப் பற்றி சொன்னார். உன் அப்பா இறந்து போனதிலிருந்து நீ எவ்வளவு பொறுப்பா குடும்பத்தை நடத்தறேன்னும் சொன்னார். அப்பவே நீதான் எங்க மருமகள் என்று முடிவுக்கு நாங்க வந்து விட்டோம்."

"ஆமாம்மா, உன் குடும்பத்தைப் பற்றி எங்களுக்கு நல்லாத் தெரியும். இதுவரை நீ சம்பாதித்தது மட்டுமல்ல இனி உன் சம்பாத்தியம் முழுவதும் உன் குடும்பத்துக்கே குடுக்கலாம். உன் தங்கைகளின் படிப்பு கல்யாணம் எல்லாம் எங்கள் பொறுப்பு. உங்க கல்யாணச் செலவெல்லாம் எங்களுடையது. நீ கட்டிய புடவையுடன் வான்னு சொன்னா சரியா வரும் போலிருக்கு. எனவே உனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு வா. எங்களுக்கு வேண்டியதெல்லாம் எங்களுக்கு ஒரு நல்ல மருமகள், என் மகனுக்கு ஒரு நல்ல மனைவி. உன் அன்பு அவ்வளவுதான்" என்று சுந்தரம் முடித்தார்.

என்ன சொல்வது என்று புரியாமல் மாலினி சரவணனைப் பார்க்க,

"என்னடா அம்மா, அப்பா பேசறாங்க... நா ஒன்னும் சொல்லலையேன்னு பாக்கறீங்களா? என் எண்ணங்களைத்தான் அவங்க சொல்றாங்க. எனக்கு உங்களை மட்டுமல்ல உங்க குடும்பத்தையும் ரொம்ப பிடிச்சிருக்கு. இந்த பில்டிங்ல இருக்கிற எல்லாரும் ஒரு குடும்பம் போல இருக்கிறது ரொம்ப சந்தோஷமா இருக்கு... ஆனா ஒன்னு...."

என்று அவன் நிறுத்த எல்லோரும் யோசனையுடன் சரவணனைப் பார்க்க அவன் தொடர்ந்தான்.

"உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா? டைம் வேணுமா டிசைட் பண்ண?"

மாலினி வெட்கத்தால் தலை குனிய அங்கிருந்த எல்லோரும் சேர்ந்து ஒரே குரலில் "அவளுக்கும் உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு" என, மாலினி வேகமாக உள்ளே ஓடினாள்.

❖❖❖❖

**10**

மறுநாள் காலையில் எழுந்ததிலிருந்தே சுகிதாவிற்கு ஒரே சந்தோஷம்... தான் நினைத்தபடி எல்லாம் நல்லபடியாக முடிந்ததே என்று உற்சாகமாக ஒரு இந்தி பாடலை பாடியபடி குளித்து தயாரானாள்.

கமலம்மாவிடம் சொல்லிவிட்டு செல்லலாம் என்று வந்தபோது அங்கே மாலினி இருப்பதைப் பார்த்து,

"என்னம்மா கல்யாணப் பொண்ணு... பகல் கனவா?" என்றாள்.

அவளை அடக்க மாலினி ஒரு வா... இருவரும் கமலம்மாவைச் சுற்றி ஓட... கமலம்மாவுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. மாலினியை இப்படி பார்த்து எவ்வளவு நாட்கள் ஆகிறது!

"போதும் கன்னுக்குட்டிகளா... ஆபீஸ் போக வேண்டாமா, நானும் ஆண்ட்டி வீட்டுக்கு போகணும்... அவங்க தேதி குறித்து சொல்லி அனுப்புவாங்க"

"ஓ அப்படியாம்மா... சரி நீங்க போயிட்டு வாங்க. நாம ஈவினிங் பேசலாம். வா மாலு..."

"இரு இரு நானும் உன் கூட வரேன்... உன்னை டிராப் பண்ணிட்டு போறேன்."

"இப்பவே என்னை டிராப் பண்ணிட்டியா?"

மாலினி மீண்டும் சுகிதாவை தாக்க, இருவரும் ஆட்டோவில் ஏறி அமர்ந்தனர்.

"சொல்லு மாலு... உனக்கு சரவணனை பிடிச்சிருக்கா?"

"நல்லவராத்தான் தெரியறார். இருந்தாலும் இதெல்லாம் சரியா வருமா சுகி, என் குடும்பம் எப்பவும் கஷ்டப்படக் கூடாது."

"ஏன் மாலு, நான் இல்லையா உன் குடும்பத்தைப் பார்த்துக்க. என்னை உங்க குடும்பத்துல ஒருத்தியா ஏத்துக்கிட்டு அடைக்கலம் குடுத்தீங்க. அப்ப இது என் குடும்பமும் தானே...."

"சுகி... நா குடும்பம்னு சொன்னது உன்னையும் சேர்த்துதான்."

அதற்குள் சுகிதாவின் மருத்துவமனை வந்து விட...

"ஓகேடா... நாம ஈவினிங் சந்திப்போம்... பை..." என்று இறங்கினாள்

கவிதா.

தன் அறையை அடைந்தவள் சாரதாவைக் கண்டதும் "குட் மார்னிங் சாரு" என்றாள்.

"குட் மார்னிங் கவி.. இப்ப நீ என்ன பண்ற, 'வி' வார்ட்ல எட்டாம் நம்பர் பெட்ல சரோஜான்னு ஒரு நார்த் இண்டியன் லேடி ஹார்ட் ஆபரேஷனுக்காக அட்மிட் ஆயிருக்காங்க. அவங்க மகன்கிட்ட அம்பதாயிரம் ரூபாய் பணம் கட்ட சொன்னோம். அவர் இன்னும் வரலை. அந்த அம்மாகிட்ட கேட்டா அவங்க ஏதோ இந்தியில சொல்றாங்கப்பா... நீ கொஞ்சம் கேட்டு சொல்லேன்... ப்ளீஸ். மகேஷ் சார் வர்றதுக்குள்ள முடிச்சிடணும் வேணும்.."

"சரி நான் போறேன்... 'வி' வார்ட், நம்பர் எட்டு தானே?"

கவிதா முதல் மாடியில் உள்ள அந்த படுக்கையை அடைந்தாள். அங்கே ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார். அருகே சென்று அந்த பெண்மணியை எழுப்பப் போனவள் அப்படியே உறைந்து நின்றுவிட்டாள்.

'ஐயோ... இது ஜெகதீஷின் அம்மா சரோஜா ஆன்ட்டி இல்லை' அங்கிருந்து வேகமாக சென்று தன் அறையை அடைந்தாள். மும்பையில் இவளுக்கு தெரிந்த குடும்பத்தை சேர்ந்தவர் அவர். 'யாரையெல்லாம் பார்க்க கூடாது என்று எண்ணி இருந்தாளோ அவர்களை பார்க்கும்படி ஆகிவிட்டதே...'

குளிர்ந்த நீரை குடித்து கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். அப்படியே கண்களை மூடி அமர்ந்தாள்.

லஞ்ச் டைமில் கவிதாவும், சாரதாவும் கான்டீனுக்கு சென்று சாப்பிட்டுவிட்டு திரும்பி வந்தனர். அப்போது கையில் தண்ணீர் பாட்டிலுடன் வெளியே வந்த ஜெகதீஷ், கவிதா அவனை கடந்த போதும்,

'அட இது மினி இல்லை (கவிதாவின் செல்லப் பெயர்). இங்க எங்க வந்தா.... அவ இறந்து போயிட்டான்னு ஆன்ட்டி அழுதாங்களே... ஒரு வேளை நாமதான் வேற யாரையாவது பார்த்து தப்பா நினைச்சிட்டோமோ' என்று அவன் போன திசையிலேயே சிறிது தூரம் சென்றவன், அவள் உள் அறையில் சத்தமாக தமிழில் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதும்,

'இது வேற யாரோ... நல்லவேளை நாம மினின்னு கூப்பிடாம இருந்தோமே' என்று தன் அம்மாவின் அறையை நோக்கி சென்றான்.

கவிதாவுக்கு தலைவலியாக இருந்தது. பார்மசிக்கு சென்று தலைவலி மாத்திரையை வாங்கச் சென்றபோது. அப்போது மருந்து கவரை வாங்கிக் கொண்டு ஜெகதீஷ் நேர் எதிரே வர தவிர்க்க முடியவில்லை.

"நான் ஜெகதீஷ் பையா... இங்க எங்க...." என்று இந்தியில் கேட்டாள்.

"மினி நீதானே? எப்படி இங்கே வந்தாய்?"

"அது ஒரு பெரிய கதை... அப்புறம் சொல்றேன். சரோ ஆன்ட்டிக்கு என்ன?"

"பைபாஸ் பண்ணனும்... நாளைக் காலை சர்ஜரி. ஆமாம், நீ இறந்து விட்டதாக..."

"நீ மருந்துகளை கொடுத்து விட்டு என் ரூமுக்கு வா... நா விவரமாச் சொல்றேன். ஓகே..." என்று தன் அறையை நோக்கி சென்றாள்.

அவளின் பால்ய கால சிநேகிதன் ஜெகதீஷ். இருவர் வீடும் பக்கத்து பக்கத்தில். பிறகு இவள் குடும்பம் வேறு இடத்திற்கு மாறி விட்டனர். ஆனாலும் இவள் ஜெகதீஷிடம் அடிக்கடி பேசுவாள். அவனுக்கு வருடா வருடம் ராக்கி கட்டும் வழக்கமும் உண்டு. இவளிடம் விவரத்தை எப்படி கூறுவது என்று யோசித்தபடி அமர்ந்திருக்க,

"என்ன டேய் இருப்பக் கவலையா?" என்ற சாரதாவின் குரல் அவளை நிகழ்காலத்திற்கு மறுபடியும் கொண்டு வந்தது.

"சே... அதில்லைப்பா... இது வேறு விஷயம்"

அதற்குள் ஜெகதீஷ் அங்கு வர, அவளை அழைத்துக் கொண்டு கான்டீனுக்குச் சென்று இரண்டு டீ வாங்கிக் கொண்டு பக்கத்தில் அமர்ந்தனர்.

"சொல்லு ஜெகதீஷ் பையா, அம்மா எப்படி இருக்காங்க?"

"ம்... உனக்கு அம்மா ஞாபகம் கூட இருக்கா?"

"பையா ப்ளீஸ்.. நான் எல்லாம் விவரமா சொல்றேன்... அம்மா எப்படி இருக்காங்க..."

"ஆன்ட்டி நடைப்பிணமா ஆயிட்டாங்க.. நீ ஒரே குழந்தை அவங்களுக்கு. அவங்களோட லாட்லி பேட்டி (செல்லப் பெண்)... உன்னைத் தேடி வாரணாசி போனாங்க... ஒரு விவரமும் கிடைக்கலை. நீ தங்கி இருந்த அறையிலிருந்து உன் ஒரு செட் உடை தான் கிடைத்தது. நொறுங்கிப் போயிட்டாங்க... அவங்க உயிரோட இருப்பதே பெரிய விஷயம்....'

ஸ்பெயின்
ஆதிக்க காலனி நாடான
போர்ட்டோரிக்கோவில் ஆர்ஸிபோ
நகருக்கு அருகில் ஆர்ஸிபோ வானிலை
ஆய்வு நிலையம் உள்ளது. இங்கு உலகிலேயே
மிகப்பெரிய அளவிலான ரேடியோ டெலஸ்கோப்
உள்ளது. தேசிய அறிவியல் அறக்கட்டளையுடன்
இணைந்து கார்னல் பல்கலைக்கழகம் இதனை இயக்கி
வருகிறது.

305 மீட்டர் அளவுள்ள இந்த டெலஸ்கோப் போல வேறு
எந்த வானிலை ஆய்வு மையத்திலும் வைக்கப்படவில்லை.
இந்த டெலஸ்கோப்பை கதிர் இயக்கம், வானியல் இயக்கம்,
ரேடார் இயக்கம் என மூன்று விதமாக பயன்படுத்திக்
கொள்ளலாம். முழுக்க முழுக்க இது சூரிய சக்தியால்
இயங்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தனியாக நியமிக்கப்பட்ட நடுவர்கள் டெலஸ்கோப்
மூலம் வானியலை ஆராய்ந்து, தங்கள்
ஆய்வுகளை வானிலை ஆய்வு
மையத்துக்கு வழங்குகிறார்கள்.

- எஸ்.என்.எஸ்.




கவிதாவின் கண்களில் இருந்து நீர் பெருகுவதைக் கண்டு, "இப்ப அழுது என்ன பிரயோஜனம்... என் அம்மாவை இங்கே அனுமதிச்சிட்டு வருவதற்கு முன் உன் வீட்டுக்கு நான் போயிருந்தேன். ஆன்ட்டி ரொம்ப அழுதாங்க.... நீ ஏன் அப்படிப் பண்ணினே? இதனால உனக்கு என்ன லாபம்?" என்றான்.

சிறிது மௌனத்துக்குப் பிறகு நடந்தவை அனைத்தையும் அவனுக்கு விவரித்தாள். மாமியார் குடும்பம் மட்டும் இல்லாதிருந்தால் தன் நிலைமை என்னவாயிருக்கும் என்று கூறியவளின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தவன்,

"மேரி சோட்டி ராணி மினி (என் இளவரசி மினி)... உனக்கா இந்த சோதனை? ஆன்ட்டி ஏன் அப்படி நடந்துக்கிட்டாங்க? அவங்களுக்கு நீ தானே உயிர்?" என்றான் ஜெகதீஷ்.

"அதுதான் எனக்கும் புரியலை பையா... ஜெட்டி அண்ணா பத்தித்தான் உனக்கு நல்லாத் தெரியுமே. அவருக்கு அவர் நினைத்தது நடந்தா போதும். சரியான சுயநலவாதி. நான் என்ன பண்றது நீயே சொல்லு?"

"நீ செய்ததுதான் சரி. கவலைப்படாதே.. நா உன்னை இங்கு பார்த்ததை யாருக்கும் சொல்ல மாட்டேன். நீ இறந்தது இறந்ததாகவே இருக்கட்டும். என் அம்மாவிற்குக் கூடத் தெரிய வேண்டாம். அவள் அங்கு போனதும் ஏதாவது உளறி விடுவாள். நீ எதற்கும் கவலைப்படாதே. எல்லாம் உனக்கு நல்லதாகவே நடக்கும்" என்று அவளுக்கு ஆறுதல் கூறினான்.

தன் மனபாரம் இறங்கிய உற்சாகத்தில்,

"பையா, இது என் செல் நம்பர் வச்சிக்கோ. ஏதாவது உதவி வேணும்னா தயங்காமக் கேளு. என் சீனியர் என்னை தேடுவோ நான் வரேன்" என்று அவள் எழ, அப்போது எதிரே கார்த்திக் வந்தான்.

"ஹாய் மினி கவிதா....."

"டாக்டர்... இது என் சிநேகிதன்

ஜெகதீஷ் பையா... இது டாக்டர் காரத்திக்" என்று இருவரையும் அறிமுகப்படுத்தினாள்.

ஜெகதீஷ் "ஹலோ" என்றபடி கார்த்திக் கைப்பற்றி குலுக்க, கவிதா கார்த்திக் டமிருந்து விடைபெற்று தன் அறைக்குச் சென்றாள்.

அவளுக்கு வேலையே ஓடவில்லை பழைய நினைவுகள் வாட்டி வதக்கியது. அம்மாவின் நினைப்பு கண்களில் நீரைப் பெருகி ஓடச் செய்தது. அடக்க முடியாமல் வாய் விட்டு அழ, சாரதா ஓடி வந்தாள்.

"கவி என்ன ஆச்சு..... எப்பா அழுறே? பளீஸ்" என்று ஆறுதலாக அணைக்க, கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு,

"ஒன்றுமில்லை சாரு... என் அம்மா நினைப்பு வந்து விட்டது" என்றாள்.

"அவ்வளவுதானே. வேணால் ஒரு பத்து நாட்கள் லீவு போட்டு விட்டு போய் அம்மாவைப் பார்த்து விட்டு வா."

"அய்யோ... என் வேதனை உனக்கு புரியாது சாரு" என்று எண்ணியவள்,

"பரவாயில்லை சாரு. இன்னும் இரண்டு மூன்று மாசம் கழித்து மாலினியின் திருமணம் முடிஞ்சதும் போறேன்" என்றாள்.

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இல்ல, இப்போ தான் அங்கே போனா, என் நினைப்பெல்லாம் இங்கேயே தான் இருக்கும் என்றால் மன்னை முடியாது. அதுவே கல்யாணம் முடிஞ்சதும் போனா நிம்மதியாக இருக்கலாம்..... இப்ப இது ஆம் ஓகே.."

"சரி, உன் விருப்பப்படி போ... இப்ப நீ வீட்டுக்கு கிளம்பு. மீதி வேலையை நான் பார்த்துக்கறேன்"

"ஓ ரொம்ப தாங்க்ஸ் சாரு" என்று தன் கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவளுக்கு வீட்டுக்கு போய் தனிமையில் வாய் விட்டு அழுதால் தன் மனபாரம் கொஞ்சம் குறையும் என்று தோன்றியது.

* * * *

## 11

வீட்டிற்கு வந்தவள் நேராக தன் அறைக்குச் சென்று கதவை மூடிக் கொண்டு, தன் தாயின் புடவையை எடுத்து மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு, அழுதபடியே உறங்கிப் போனாள். கைப்பேசியின் ஒலி அவளை எழுப்ப, மாலினி அழைத்திருந்தாள் மூன்று முறைகள்.

அவளை திரும்ப அழைக்க,

"ஏய் நீ எங்க இருக்க... நான் பயந்தே போயிட்டேன்... சாரு உனக்கு உடம்பு சரியில்லாமல் வீட்டுக்கு போயிட்டதா சொன்னா. நீ செல்லையும் எடுக்கல என்ன ஆச்சு?" என்றாள்.

"ஒன்றுமில்லைடா ஒரே தலைவலி... அதான் வீட்டுக்கு வந்து நல்லா தூங்கிட்டேன். இப்ப பரவாயில்ல..."

"அம்மா இல்லையா?"

"நா வந்தபோது வீடு பூட்டி இருந்துச்சு. அங்கிள் வீட்டுக்கு போயிருப்பாங்கன்னு நினைக்கிறேன். என்ன விஷயம்? ஏதாவது சொல்லணுமா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை... நா வீட்டுக்குத்தான் வந்துகிட்டிருக்கேன். சரி பை."

இவளுக்கு மீண்டும் அழுகை வந்தது 'என் அம்மா அருகில் இருந்திருந்தால் நான் அழுதே இருக்க மாட்டேனே மாலு' என்று எண்ணியபடி எழுந்து போய் முகம் கழுவி விட்டு டீ போட்டுக் குடித்தாள். கொஞ்சம் தெளிந்தது மனது.

அதற்குள் மாலினியும் வந்துவிட்டாள்.

"ஏய் என்ன ஆச்சுப்பா... அழுதியா? சொல்லு... ஏன் இப்படி மனசுக்குள்ளயே வச்சிகிட்டு கஷ்டப்படறே நான் வேணும்னா உங்க அம்மாகிட்ட பேசட்டுமா?"

"அய்யோ வேண்டாம் மாலு... என்னுடைய கொஞ்ச நஞ்ச நிம்மதியும் போய் விடும். ப்ளீஸ்... என்னை தவறாக நினைக்காதே. கொஞ்சம் டைம் குடு. நானே உன்னிடம் விவரமாக சொல்கிறேன். இன்னிக்கு மும்பையிலிருந்து வந்திருந்த ஜெகதீஷ் பையா அம்மாவைப் பற்றிச் சொல்லவும் என்னால் தாங்க முடியலை."

"சரி ஒன்னு பண்ணலாம். நீ உங்க வீட்டு நம்பரைக் குடு. நான் அம்மாவிடம் பேசுகிறேன்."

"அய்யோ... வேண்டாம் மாலு"

"நீ இங்கிருப்பதை சொல்ல மாட்டேன் கவி... ஸ்பீக்கரில் போடுகிறேன். நீ அம்மாவின் குரலையாவது கேட்கலாமே"

சிறிது யோசனைக்குப் பின் நம்பரைக் கொடுத்தாள்.

ஸ்பீக்கரில் வைத்து எண்களை அழுத்த எதிர்புறத்தில் டெலிபோன் மணி ஒலித்தது.

"ஹலோ கோன்? (யார் பேசுவது)"

"அது கவிதாவின் வீடா" என்று இந்தியில் மாலினி கேட்க,

"ஆமாம் நீங்க யாரு கவிதா இல்லை" என்று குரல் வந்தது.

"நான் கவியின் ஃப்ரெண்டு மாலினி. ஞாபகம் இருக்கா ஆன்ட்டி நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கிறேன்"

சிறிது மௌனத்திற்கு பின், "ஹா... ஞாபகம் இருக்கு. நீ எப்படி இருக்க? உன் குடும்பம் நல்லா இருக்கா?" என்றார்.

"எல்லாம் நல்லா இருக்காங்க ஆன்ட்டி. எனக்கு திருமணம் நிச்சயமாகி இருக்கு... அதை கவிகிட்ட சொல்லலாம்னு..."

"ஓ... உனக்கு விஷயம் தெரியாதா பேட்டி (மகளே) கவிதா நம்மையெல்லாம் விட்டுட்டு எங்கேயோ போயிருச்சு."

குரலில் பதற்றத்தை வரவழைத்துக் கொண்டவள்,

"அய்யோ என்ன சொல்றீங்க ஆன்ட்டி..." என்றாள் மாலினி.

"ஆமாம்மா... நாந்தாம்மா தப்பு பண்ணிட்டேன். அது சொல்ல வந்ததை கேக்கல. இல்லை ஜெட்டி அண்ணா சொல்றதுதான் சரின்னேன். அது என்ன பண்ணும். என்னை பிடிக்கலே என்னை விட்டு போயிருச்சு. கண்ணை குத்திருச்சு. படி கூட இல்லை." தொடர்ந்து விசும்பல் கேட்க, கவிதாவால் தாங்க முடியவில்லை. தொடர்பை துண்டிக்குமாறு மாலினிக்கு ஜாடை காட்டினாள்.

ஆனால் தொடர்ந்து பேசினாள் அவள். "ஆன்ட்டி அப்படியெல்லாம் எதுவும் ஆகியிருக்காது. எங்கேயாவது அவ பத்திரமா இருப்பா. நிச்சயமா ஒருநாள் உங்க கண்ணு முன்னால வந்து நிப்பா பாருங்க. அவ நிச்சயம் உங்களை விட்டு போயிருக்க மாட்டா. திரும்பி வருவா ஆன்ட்டி."

"எனக்கும் அப்படித்தாம்மா மனசு சொல்லுது. அதான் உயிரோட வாழ்ந்துகிட்டு இருக்கேன். இல்லைன்னா அவ போன இடத்துக்கே நானும் போயிருப்பேன். ஜெட்டி அண்ணா கூட அவசரப்பட்டுட்டோமோன்னு இப்ப ரொம்ப வருத்தப்படறாரு. நல்லவார்த்தை சொன்னே. நீ நல்லா இருக்கணும். உன் கல்யாணம் நல்லா நடக்கும்மா. என் லோலா பிடியா (தங்கக்குட்டி) நிச்சயமா என்கிட்ட பறந்து வரும்" என்றவர் போனை துண்டித்தார்.

"ஆமாம்மா... நிச்சயம் வருவேன் தாங்க்ஸ் மாலு. அம்மா குரலை கேட்டது கொஞ்சம் தெம்பாயிருக்கு. அவங்களுக்கும் ஏதாவது சொல்லி நம்பிக்கை குடுத்திட்டே. அது அவங்களை என்னை பார்க்கற வரைக்கும் உயிரோட வச்சிருக்கும்..."

"ஏய் நோ பார்மாலிட்டீஸ்... இப்ப பாப்பாக்கு திருப்திதானே?"

"ஓ யெஸ்" என்று சிரித்தபடி மாலினியை அணைத்துக் கொண்டு அவள் போர்வைக்குள் புகுந்தாள்.

இன்னும் என்னிடம் ஏன் வந்தாய் என்று ஒரு வார்த்தை கேட்கவில்லையே மாலு?"

"ஏய் என்ன யோசனை?"

"ஒன்றுமில்லையே!"

"நான் சொல்லட்டுமா... என்னடா இவ நம்மளைப் பத்தி ஒன்னும் கேட்கலையேன்னு நினைக்கிற. அதானே... நீ எப்ப வேணும் மானாலும் என்கிட்ட சொல்லலாம்... நா உன்னை தவறாகவே நினைக்க மாட்டேன்... வா, அம்மா கூட அம்மா உப்புமா செஞ்சிருக்காங்க... ஒரு பிடி பிடிக்கலாம்"

* * * *

## 12

பேங்கின் கல்யாணத்தில் ஏவ உப்புமாவுடன் அமர் தமாய் ருசித்து ஏப் போகும் போல அருமை யான காபி தொடர்ந்து, பின் சிறிது நேரப்பேச்சு பெருந்தொகை எடுத்து நீட்டினார்.

"இந்தாம்மா... தட்டி வீட்டில வைச்சிருந்த பண்ணிக் கொடுத்தேன். நமக்கு குடுத்துருப்பினாங்க"

அப்படியே வைச்சிருந்த வாயில் கரைந்தது. மணம், ருசி, நிறம், பதம் எல்லாமே ஏ ஒன்.

"அம்மா பேசாம நீங்களே ஒரு ஸ்வீட் ஷாப்போ ஓட்டலோ வைக்கலாம்மா" என்றாள் கவிதா.

"என்ன ஜோக் பண்றியா"

"இல்லைம்மா சீரியஸா சொல்றேன்"

"வேண்டாம் கவி, அம்மா அப்புறம் இன்னும் அடுப்பில் வேகணும்" மாலினி வருத்தமுடன் கூறினாள்.

"சேச்சே... அதுமாதிரி இல்லை மாலு. ஆட்களைப் போட்டு வேலை வாங்குவோம். அம்மா சூப்பர்வைஸ் பண்ணினாப் போதும்... எனிவே இப்ப உன் கல்யாணம் நல்லபடியா முடியட்டும். அப்புறம் பார்க்கலாம்... அம்மா அவங்க தேதி குடுத்தாங்களா?"

"ஆமா சரி... ஆவண்ட் மாதம் பதினைந்தாம் தேதி வச்சிக்கலாம்னாங்க."

"சுதந்திரதினத்தன்னிக்கா? யாருக்கு யார் கிட்டேர்ந்து விடுதலை" என் கவிதா கேட்ட...

"எனக்கு உங்கிட்டேர்ந்து" என்று தானும் சீண்டினாள் மாலினி.

"ஆனா... அன்னிக்கு சரவணன் சாரோட சுதந்திரம் பறிபோகப் போவது மட்டும் நிச்சயம்" என கவிதா கூற

"ஏய் வாலுங்களா மேல சொல்றதைக் கேளுங்க... வர புதன் கிழமை அவங்க வீட்டுல தாம்பூலம் மாத்திக்கலாம்னாங்க. நாலரு மணிக்கு வண்டி அனுப்புறாங்களாம்... ஆறு மணிக்கு நல்ல நேரமாம். கல்யாணம் அட்டு வீட்டுலயோ இல்லை கோவில்லயோ வச்சி பண்ணிட்டு மாலை ரிசப்ஷன் அவங்க பெரிசா குடுத்துக்கறாங்களாம். நான் மதிய சாப்பாட்டு செலவு எங்களுடையதுன்னு சொன்னேன். அட்டு ஒத்துக்கவே மாட்டேன்னார். அந்த செலவாவது நாங்கதான் பண்ணுவோம்னு நான் கட்டாயமா சொல்லிட்டேன்" என்றார் கமலம்மா.

"எம்மா இழுத்து விட்டுக்கிற?"

"இல்லை மாலு... அம்மா சொன்னதுதான் சரி. அவங்க எல்லாருந்தான் நல்லவங்களா இருந்தாலும் நமக்குன்னு ஒரு கௌரவம் இருக்கில்ல அத விட்டுக் கொடுக்கக் கூடாது"

"அப்படிங்களா பாட்டி? நீங்க சொன்னா சரியாத்தான் இருக்கும்... எத்தனை எவ்வளவு கல்யாணங்களை பண்ணி வச்சிருக்கீங்க..." என்று சிணுங்கிய வெண்டையடித்தாள் மாலினி.

அவளை அருகிலிருந்த தலையணையால் ஓங்கி ஒரு அடி அடித்தவள், "அம்மா நீங்க மேல சொல்லுங்க." என்றாள் கவிதா.

"கையில... துணிமணிக்கு அது இதுக் குன்னுக் கூட ஒரு பைசா குடுக்கக்கூடாதுன்னு கறாரா சொல்லிட்டாங்களாம். நம்மளால முடிஞ்சதை செய்யணும் சரி"

"கட்டாயம் செய்யலாம்மா. ஒரு லிஸ்ட் போடுவோம். நம்மகிட்ட என்ன இருக்கும்மா? சொல்லுங்க?"

அதற்குள் பாலு அலுவலகத்திலிருந்து வர.

"வா பாலு... சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்க" என்று அவனுக்கும் மைசூர் பாகையும் காபியையும் கமலம்மா கொடுக்க,



## நெஞ்சைத் தொடும் 'தோஹா' அருங்காட்சியகம்!

கத்தார் தலைநகர் தோஹாவில் கடலுக்கு நடுவில் அதிசயமான கலைப்பொக்கிஷங்களின் உலகம் ஒன்று உள்ளது. 'கத்தார் இஸ்லாமிய அருங்காட்சியகம்' என்று அழைக்கப்படும் இந்த அருங்காட்சியகம் அனைவரும் பார்க்க வேண்டியதுன்றே. தெற்குப் பகுதி கடற்கரையோரம் மனிதனால் உருவாக்கப்பட்ட தீவாக 3,000 சதுரமீட்டர் பரப்பில் ஐந்து அடுக்குகளை கொண்டது இந்த அருங்காட்சியகம்.

வைரம் மற்றும் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட திருக்குர் ஆன் புராதன பெட்டி இங்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த புராதன பெட்டிக்குள் 12-ம் நூற்றாண்டில் தங்க எழுத்துக்களால் எழுதப்பட்ட திருக்குர் ஆன் நூல் வைக்கப்பட்டுள்ளது. கிளியைப் போல் தோற்றம் தரும் பாங்கான் பறவை தங்கத்தில் மின்னுகிறது. இதில் எமரால்டு, ரூபி, சபையர் போன்ற வைரகற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

இங்கே அணிவகுத்து நிற்கும் பொருட்கள 7-வது நூற்றாண்டில் இருந்து 19-வது நூற்றாண்டைச் சார்ந்தவை. கண்ணாடி தடுப்புக்குள் அமர்ந்து பார்த்தால் அருகிலேயே தெரியும் பரந்த கடல், தூரத்தே தெரியும் கட்டடங்கள் படகுசவாரி செய்யும் கத்தாரிகள், தகிக்கும் வெயிலை மீறி வரும் ரம்யமான குளிர்காற்று பரந்து விரிந்த காரிடார், ஓட்டல், ஷாப்பிங் மால், தியானக்கூடம் என அனைத்தையும் ரசிக்கலாம்.

இந்த அருங்காட்சியகத்துக்குள் நுழைவதற்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை என்றாலும், கடும் சோதனைகளை கடந்து தான் உள்ளே செல்ல முடியும். நிமிர்ந்து பார்த்தால் கழுத்தை வலிக்கும் அளவுக்கு உலோகத்தால் உருவாக்கப்பட்ட குதிரை கம்பீரமாக காட்சி தருகிறது. எந்நேரமும் கண்காணிப்பு கேமராவில் ஊழியர்கள் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

2008-ம் ஆண்டு அதிநவீன தொழில் நுட்பத்துடன் பிரமிக்கத்தக்க வகையில் இந்த அருங்காட்சியகத்தை கட்டியவர் உலகின் மிக பிரபலமான முன்னணி கட்டிடக்கலை நிபுணர் இயோ மிங் பேய் என்பவர் என்பதை நாம் அறியும் போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

- [illegible]

கவிதா எல்லாவற்றையும் விளக்கினாள். பாலுவும் பொறுப்பாக இவர்கள் பேசுவதை கேட்டபடி, லிஸ்ட் போட ஒரு பேப்பரை எடுத்தான்.

"இவ பாட்டி இறப்பதற்கு முன்னால எங்கிட்ட மூணு பேத்திகளுக்கும் செயினும், கம்மலும் குடுத்திருக்காங்க. என்கிட்ட இருந்தா அடமானம் வச்சிடுவேனோன்னு பயந்து, அதை அப்பாகிட்டே கொடுத்து அவர் பேங்க் லாக்கரில் வச்சிருக்கேன். அப்புறம் அப்பப்போ சமையல் வேலை செஞ்சா கிடைக்கிற எக்ஸ்ட்ரா பணத்தில ஒரு ஐந்து சவரன் சேத்து வச்சிருக்கேன். வெள்ளிக்குத்து விளக்கு ஒரு ஜோடி இருக்கு... கொலுதான். அந்த காலத்துல நவராத்திரிக்கு பெரிய சமையல் செஞ்சா கொடுத்த பாத்தில வெள்ளி வச்சிக் குடுத்தாங்க. பண விவகாரம் மாலினிக்குத்தான் தெரியும். அவங்க இருபது பேரு சாப்பிட வருவாங்களாம். மொத்தமா ஒரு ஐம்பது பேருக்கு சாப்பாடு நம்ம வீட்டிலேயே வச்சிக்கலாம். மாலினியோட அப்பாவோட சிநேகிதர் ஒருத்தர் சத்திரம்னு அவரைப் பார்த்து பேசிட்டு வந்தேன். அவர் காண்ட்ராக்ட் சமையல் செய்யறாரு. அவர் சாமான் மட்டும் வாங்கிக் குடுத்துடுங்க... கேஸ், லேபர் தான் ஏத்துக்கறேன்னு சொல்றார்."

"வெரி குட்... ரொம்ப நல்லவரா இருக்காரு. அப்புறம் என்னம்மா... வெறும் ஜவுளி மட்டும்தானே? ஒரு சவரனுக்கு மாப்பிள்ளைக்கு மோதிரம் செஞ்சிடலாம். மீதியில கூடக் கொஞ்சம் போட்டு இரண்டு சவரனில ஒரு ஜோடி வளையல் வாங்கிடலாம். என்னம்மா சொல்றீங்க? நான் என் செலவில் மாலுக்கு ஒரு நெக்லஸ் வாங்கித் தந்திடறேன்... அது என் பங்கு"

"ஏய் நாந்தும் ஜோவி... நீ என்ன நிலைக்கிட்டு இருக்க. நீ மட்டும் ஒன்னும் வாங்கித்த மாட்ட... ஆனா பெரிய மனுஷி நீ எனக்குக் குடுப்பியா? எனக்கும் வேண்டாம்"

"ஏய் மாலுக் கண்ணா... கோவிக்கக்கூடாது. எனக்கு கல்யாணம் ஆகும்போது நீ திருமதி.சரவணன் ஆகி இருப்பே.. அப்ப நல்ல காஸ்ட்லி கிஃப்டா ஒண்ணு உன்கிட்டேர்ந்து வாங்காம விட மாட்டேன்" என்று வெண்டையடித்து நிலைமையை சகஜமாக்கினாள் அவள்.

"சரிம்மா... இந்த ஐந்து வருட சம்பாதிப்பதில் ஒரு லட்சம் பேங்கில இருக்கிறது. மீதம் கொஞ்சம் சின்ன சேமிப்பு எல்லாம் சேர்த்து ஒரு முப்பத்தைந்து நாற்பது ஆயிரம் தேறும். வளையல் வேண்டாம், நான் போட்டுக் கொண்டிருப்பது தங்கம்தான்" என்றார் கமலம்மா.

"சரி... அம்மா சொல்வதை பார்த்தால் சாப்பாட்டு செலவு ஐந்தாயிரத்தில் முடிந்து விடும். மீதம் இருபதாயிரத்தில் துணிமணி வாங்கலாம், என்ன ஓகேவா"

"ஆமாங்கா... கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு மாசம் இருக்கே... அதுக்குள்ள எனக்கும் வீட்டு செலவு போக கையிலிருந்தாயிரம் இருக்கும். அதையும் எடுத்துக்கலாம். இருபத்தைந்தாயிரம் மாலுக்கா கொண்டு போகட்டும். அது அவங்க கஷ்டப்பட்டு

சம்பாதித்த பணம்" என்றான் பாஸ்கர்.

"அதெல்லாம் வேண்டாம்ப்பா பெரிய மனுஷா... அது இங்கேயே இருக்கட்டும். உனக்கு வேலை இன்னும் நிரந்தரம் ஆகலை."

"சரி அதை அப்புறம் பார்க்கலாம்... இப்ப இந்த பொண் ஓகேவா?"

"ஓகே" என்றனர் இருவரும் ஒருமித்த குரலில்.

மாலினி அப்படியே சசிதாவை அணைத்துக் கொண்டாள்.

"நீ நிஜமாகவே போன ஜென்மத்தில என் கூடப்பிறந்தவளா இருந்திருக்கணும்!"

"அடிப்பாவி... இந்த ஜென்மத்திலேயும் படித்த வந்துட்டு போலேன்தியா?"

மாலினி சசிதாவை அடிக்க துரத்த, சசிதா அம்மாவை சுற்றிச் சுற்றி ஓட, இருவரும் குழந்தைகளாக மாறி காட்சியளித்தனர்.

* * * *

## 13

மறுநாள் அவள் வேலைக்கு வந்தபோது மருத்துவமனையின் வாசலிலேயே நின்றுக் கொண்டிருந்தான் ஜெகதீஷ். சசிதாவைப் பார்த்ததும் வேகமாக வந்தான்.

"என்ன பையா... என்ன அவசரம்?"

"இன்னைக்கு பதினோரு மணிக்கு ஆபரேஷன் வச்சிருக்காங்க. நான்கு பாட்டில் ரத்தத்திற்கு ஏற்பாடு பண்ணச் சொன்னாங்க... பண்ணிட்டேன். ஆபரேஷன் போது நீ பக்கத்தில இருந்தா, கொஞ்சம் எனக்கு தைரியமாயிருக்கும்... அதான் உன்னை எதிர்பார்த்து காத்துகிட்டிருந்தேன்"

"நீ கவலைப்படாதே... நா கூடவே இருப்பேன். ஆன்ட்டி எங்கே?"

"டீ-டி எக்கோ எடுக்கக் கூட்டிட்டு போயிருக்காங்க. பத்து மணிக்கு ஆபரேஷன் தியேட்டருக்குக் கூட்டிட்டு போயிடுவாங்களாம்"

"சரி நா வரேன் பையா. ஆன்ட்டிக்கு ஒன்னும் ஆகாது. அவங்க நல்லபடியா வந்துடுவாங்க. பகவான் சே ஸப்கா ப்ரோசா ரக்கோ (கடவுளை நம்பு)" என்று அவனுக்கு ஆறுதல் கூறி அனுப்பி விட்டு தன் அறைக்குச் சென்றாள்.

செல்போன் அடிக்க எடுத்தாள், கமலம்மா தான்.

"சொல்லுங்கம்மா"

"சசி... சாயங்காலம் பாஸ்கரை அங்கே வரச் சொல்றேன்... மாப்பிள்ளைக்கு ஒரு நல்ல சரிகை வேஷ்டியும் ஒரு கோல்டன் சட்டையும் எடுத்துட்டு வந்துடும்மா. தாம்பூலம் மாத்தும்போது குடுக்கணும். மாலினிகிட்ட சொன்னா வீண் செலவுன்னுவா. நான் பணம் குடுத்தனுப்புறேன் பாஸ்கர்கிட்ட. கொஞ்சம் நல்லதா வாங்கிடும்மா"

"சரிம்மா கவலைப்படாதீங்க. நான் வாங்கிடறேன்..." என்று போனை அணைத்து விட்டு வேலையை கவனிக்கத் தொடங்கினாள்.

பதினோரு மணிக்கு ஆபரேஷன் அறைக்கு விரைந்தாள். அப்போது சரோஜாம்மாவை தயாராக அந்த அறையின் வாசலில் ஸ்டெரச்சரில் படுக்க வைத்திருந்தார்கள். அவர் கண்களை மூடி படுத்திருந்தார். சசிதா அவர் அருகில் சென்று அவர் கைகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ஸ்பரிசம் பட்டு சரோஜாம்மா கண்களை விழித்துப் பார்க்கும் சமயம், அவரை ஆபரேஷன் அறைக்குள் தள்ளிச் செல்ல துவங்க, கண்கள் கலங்கி நிற்கும் ஜெகதீஷிடம் சென்றாள் சசிதா.

"எல்லாம் நல்லபடியாக நடக்கும் பையா... கவலைப்படாதே... வா, நாம போய் காபி சாப்பிடலாம். ஆபரேஷன் முடிய மூன்று நான்கு மணி நேரமாவது ஆகும்" என்று அவனை கான்டீனுக்கு அழைத்துச் சென்றாள்.

காபி குடிக்கவும் கொஞ்சம் தெளிந்த ஜெகதீஷ்,

"நீ போய் உன் வேலைகளை கவனி சிஸி. ஏதாவது தேவைப்பட்டால் நான் உன்னை அழைக்கிறேன்" என்றான்.

"சரி பையா" என்று தன் அலுவலக அறைக்கு சென்று தன் வேலைகளில் மூழ்கினாள் அவள்.

"என்னம்மா... செல் அடிப்பது கூடத் தெரியாமல் அப்படி என்ன வேலை?" என்ற சாரதாவின் குரல் ஒலிக்க,

"ஓ சாரி" என்று செல்லை எடுத்தாள்.

"சொல்லு மாது... சாரி வேலை பிஸியா இருந்தது......"

"ஏய்... நான் வேணா அப்புறமா கால் பண்ணட்டுமா சசி....."

"இல்லை இல்லை... நோ ப்ராப்ளம் சொல்லு..."

"அது வந்து..."

"வந்து...?"

"அது வந்து..."

அவள் தயக்கத்தை தொண்டையில் ரசித்து புரிந்துக் கொண்டவளாக "ஓஹோ... என்ன சரவணன் பேசினாரா?" என்றாள்.

"ஆமா, அது உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கு என் மாலினியைத் தெரியும்... சொல்லு என்ன விஷயம்?"

"இன்னைக்கு மாலை ஆறு மணிக்கு டி.நகருக்கு வரச் சொன்னார். எனக்கு நிச்சயதார்த்த புடவை எடுக்கணுமாம். நான் அவர்களையே எடுக்கச் சொன்னேன். ஆனால் அதை கட்டப் போறவ வரச் சொன்னாங்களாம்"

"அத்தையா... அது யார் மாது? ஓ சரவணனின் அம்மாவா! வெரிகுட்... அத்தனை அத்தையா?" என்று அவளை கிண்டலடித்து "சரி... எனிவே அம்மா சரவணனுக்கு வேஷ்டி சட்டை எடுக்கச் சொல்லி பாஸ்கரை அனுப்புறதா சொன்னாங்க. நல்லதா போச்சு... எல்லாத்தையும் ஒன்னா முடிச்சிடலாம்"

"வேஷ்டி சட்டையா... எதுக்கு?"

"ஆங்... உனக்கு மட்டும் அவங்க புடவை எடுப்பாங்க... நாம அவருக்கு எடுக்க வேண்டாமா....! நீ நேரே இங்கே வா... பாஸ்கரும் வருவான்.. எல்லாரும் ஒன்னாப் போகலாம் பை" என்று போனை வைத்தாள்.

* * * *

## 14

மாலையில் சரோஜாம்மா ஆபரேஷன் நல்லபடியாக முடிந்தது என்றும், இப்போது ஐ.சி.யூவில் மயக்கத்தில் இருக்கிறார் என்றும் அறிந்ததும் ஜெகதீஷிடம் சென்று, "அண்ணா நான் கெளம்பட்டுமா? நீ தனியா இருப்பியா? ஏதாவது சாப்டியா?" என்று கவலையுடன் கேட்க,

"நீ கௌம்பு சிஸி. நான் பாத்துக்கிறேன்" என்றான்.

"ஏதாவது வேணும்னா எத்தனை மணியானாலும் என்னை செல்லில் கூப்பிடு. நான் வரேன்" என்று திரும்பி திரும்பி பார்த்தபடி செல்வதற்கு மனமில்லாமல் சென்றாள்.

'பாவம் எவ்வளவு நல்லப் பொண்ணு... இவளுக்குத்தான் எவ்வளவு பிரச்சினை' என்று எண்ணியபடி அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தவனை,

"ஹலோ மிஸ்டர் ஜெகதீஷ்" என்ற டாக்டர் கார்த்திக்கின் குரல் அழைத்தது.

"ஹலோ டாக்டர்" என்றபடி கையை குலுக்கியவனிடம்,

"என்ன உங்க மதரோட சர்ஜரி ஆயிடுச்சா?" என்றான் கார்த்திக்.

"கடவுளோட திருவருளால நல்லபடியா ஆயிடுச்சு டாக்டர். இன்னும் மயக்கம் தெளியலை."

"அப்ப வாங்க கான்டீன் போய் ஏதாவது சாப்பிடலாம்."

"வேணாம் டாக்டர்... எனக்கு பசியில்லை"

"பரவாயில்லை வாங்க... எனக்கு பசிக்குது. டீ நா குடுக்கிறேன்" என்று கார்த்திக் சொல்ல,

"ஐயோ அதுக்கில்லை... சரி வரேன்" என அவன் சொல்ல, இருவரும் கான்டீனுக்கு போனார்கள்.

தன் செய்கை நினைத்து கார்த்திக்குக்கே ஆச்சரியமாக இருந்தது. 'இதென்ன ஏதோ ரொம்ப நாள் பழக்கமானவனைப் போல...' என்ற எண்ணம் தோன்றியது.

காபி குடித்தபடி,

"சசிதா உங்களுக்கு உறவா ஜெகதீஷ்?" என்றான்.

"இல்ல டாக்டர், நாங்க ரெண்டு பேரும் மும்பையில பக்கத்துப் பக்கத்து வீட்டுல இருந்தவங்க. எனக்கு அவ வருஷாவருஷம் ராக்கி கட்டுவா. அதனால் அண்ணன் முறை. சொல்லப்போனா அவளுக்கு நா நண்பன், அண்ணன் எல்லாம்."

"மும்பையிலா?"

"ஆமாம்... ஏன்?"

"என்கிட்டப் போபால் என்று சொன்னாளே"

"டாக்டர்..." என்று ஜெகதீஷ் அழைக்கவும் சுதாரித்துக் கொண்டு,

"வேற ஏதாவது வேணுமா ஜெகதீஷ்?" என்றான்.

"இல்ல டாக்டர். சசிதா ரொம்ப நல்லப் பொண்ணு. ரொம்ப சவுகரியமா வாழ்ந்தப் பொண்ணு. பாவம் தன் வீடு, வாசல், அம்மா, அப்பா எல்லாரையும் விட்டுட்டு இங்க வந்து கஷ்டப்படுது"

"ஏன் என்ன ஆச்சு?"

என்ற கார்த்திக்கின் கேள்வி ஜெகதீஷை மடமடவென்று சசிதாவின் கதையை

அவனிடம் கொட்ட வைத்தது. ஏற்கனவே அவனைப் பற்றிய கவலையுடன் தன் அம்மாவைப் பற்றிய கவலையும் சேர தன் மனபாரத்தை யாரிடமாவது சொல்ல மாட்டோமா என்று காத்திருந்தவளுக்கு கார்த்திக்கின் கேள்வி ஒரு வடிகாலாக அமைந்தது.

அவளைப் பற்றிய விவரங்களை கவனமாக கேட்ட கார்த்திக்குக்கு, சுதாவின் மேல் பரிதாபம், மரியாதை, அன்பு தோன்றியது.

'இத்தனை மனக் கஷ்டத்தோடு இவள் எப்படி சிரித்த முகத்துடன் எல்லாருக்கும் உதவி பண்ணிக் கொண்டு இருக்கிறாள்' என்று வியந்தான்.

கார்த்திக் அவளுடன் பழகிய நாட்களில் ஒரு முறை தாலசீமியா நோயைப் பற்றியும், மற்றொரு முறை நெருங்கிய உறவில் கல்யாணம் செய்தால் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய குறைபாடுகளைப் பற்றியும் சுதாதான் உற்சாகமாக அதற்கு வேண்டிய விவரங்களையும், படவிளக்கங்களையும் ஏற்பாடு செய்து இவனுக்கு மிகவும் உதவியாக இருந்தாள். இதோ அடுத்த வாரம் ஆட்டிஸத்தைப் பற்றி ஒரு வொர்க்ஷாப்பிற்கு ஏற்பாடு செய்திருப்பதால் அதற்கான விவரங்களை சேகரித்துக் கொண்டு இருக்கிறாள்.

ஜெகதீஷிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பும் போது அவன் மனசெல்லாம் சுதாவே நிறைந்திருந்தாள்.

அவன் வீடு நுங்கம்பாக்கத்தில், அழகான பங்களாவில் அவன்





பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியுடன் இருந்தான். ஒரே தங்கை அனுவுக்கு கல்யாணமாகி சிங்கப்பூரில் வாசம்.

வீட்டிலும் யோசனையிலேயே இருந்தான். இரவு சாப்பாட்டின் போது அவன் சுதாவை முதன் முதலில் சந்தித்த போதைய சந்திப்பை நினைத்து தானே புன்னகைக்க,

"என்னடா கார்த்தி... என்ன நீயே சிரிச்சுக்கிறே?" என்றார் தாத்தா கோவிந்தன்.

"ஒன்னுமில்ல தாத்தா..." என்று அசடு வழிந்தவனை, அவன் அப்பா ராமேஸ்வரன்,

"நீ அசடு வழியறதிலேருந்தே ஏதோ இருக்குன்னு தெரியுது..." என்று வம்பிழுத்தார்.

பாட்டி சுந்தரியும் "என்னடா பேரா... லவ்வா? இல்ல கல்யாண ஆசையா?" என்று கேட்க, அவன் வெட்கத்துடன் "அதெல்லாம் இல்ல பாட்டி" என்று மழுப்பினான்.

"டேய் ஏதுவாயிருந்தாலும் சொல்லுடா..." என அம்மா அமிர்தா கெஞ்சினாள்.

அவர்கள் கொஞ்ச நாட்களாகவே அவனிடம் திருமணம் செய்யச்சொல்லி வற்புறுத்திக் கொண்டிருக்கின்றனர். இவன் தான் பிடி கொடுத்தே பேசவில்லை.



"எனக்கே சரியா தெரியலை. இப்ப நீங்கல்லாம் பேசப் பேச அது தானோன்னு தோணுது. எனிவே சீக்கிரமே நான் நல்ல விஷயம் சொல்றேன். இப்ப நா போய் தூங்கணும். அவ என் கனவுல வந்தா அவளை நா என் பண்றேன்னு பார்க்கும்... ஓகே குட் நைட் எவ்ரிபடி" என்றபடி தன் அறைக்குச் சென்றான்.

அவன் போனதும் பாட்டி சுந்தரி "முருகா எப்படியாவது இன்னிக்கு என் பேரன் கனவுல அவன் கனவுக்கன்னி வர ஏற்பாடு பண்ணுப்பா" என்று வேண்ட, எல்லோரும் வாய்விட்டு சிரித்தனர்.

* * * *

## 15

வாசலுக்கும் உள்ளுக்குமாய் குட்டி போட்ட பூனை மாதிரி அலைந்துக் கொண்டிருந்தார் கமலம்மா.

"என்னடி இது... துணி வாங்க போனவங்களை இன்னும் காணோம்... மணி பத்தாக ஆகுது... உங்கக்கா ஏதாவது முரண்டு பிடிக்கறாளா... ஒரு போனாவது செய்யக்கூடாது?"

"அம்மா, அவங்க என்ன குழந்தைங்களா? நீ உள்ள வாம்மா... அக்காக்கு சரவண மாமாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. அதனால ஒண்ணும் சொல்லாது... கூடத்தான் பாவ் அண்ணன் இருக்கே. நீ வாம்மா உள்ளே" என்று தாரிணி, அம்மாவின் கையை இழுத்தாள்.

அப்போது வாசலில் ஒரு ஆட்டோ வந்து நிற்க அதிலிருந்து தூக்க முடியாமல் கையில் பைகளுடன் வந்து சேர்ந்தனர் மாலினியும், சுஜிதாவும் பாவனாவுடன்.

"என்ன இது இவ்வளவும்?" என்றார் கமலம்மா.

"இருக்கம்மா... ஏய் கன்னு, முன்னு எல்லாரும் வாங்க. இதாங்கம்மா இது உங்களுக்குப் புடவை. இந்த நாலு புடவைகளும் மாலுவுக்கு. எனக்கு, கன்னு முன்னுக்கு ஒரே மாதிரி. இந்த சல்வார் செட்டுகள் கன்னு முன்னுவுக்கு. இதோ இந்த பேண்ட் ஷர்ட் பசங்களுக்கு. இந்த ரெண்டு புடவைகளும் மாலுவுக்கு... அப்பாடா எல்லாத்தையும் மறக்காம சொல்லிட்டேனா?" என்று மூச்சு வாங்கினாள் சுஜிதா.

"என்னடி இது? கடையையே வாங்கிட்டு வந்திருக்கியா? இதுக்கெல்லாம் ஏது பணம்? நா பாங்கலிட்ட கேஷ் கட்டைக்குதான பணம் குடுத்தேன். அதை வாங்கினீங்களா இல்லையா? ஏய் சுஜி... நீ சொல்லுடீயா?" என்று கமலம்மா பேசிக் கொண்டே போக,

"அம்மா... வெயிட் வெயிட்... இதெல்லாம் உங்க வருங்கால மாப்பிள்ளையும், சம்பந்தியும் உங்களுக்கு வாங்கி அனுப்பினது. அதனால நீங்க அவங்களைதான் கேட்கணும்" என்றாள் சுஜிதா.

"என்னது இத்தனையுமா? அவங்கதான் வாங்கி குடுத்தாங்கன்னா உடனே எடுத்துக்கிட்டு வந்துடறதா... நாசுக்கா மறுக்க வேணாமா?"

"அம்மா... நாசுக்கா மறுத்ததனாலதான் இத்தோட நின்னுது... இல்லன்னா இன்னும் பெரிய மூட்டையாயிருக்கும். இதை தவிர அக்காக்கு நிச்சயதார்த்தப் புடவை, கல்யாணப் புடவை ரெண்டு, ரிசப்ஷன் புடவையெல்லாம் அவங்க கொண்டு போயிருக்காங்க. சைஸுல குடுப்பாங்களாம். ரவிக்கைத் துணியை மட்டும் தைக்கக் குடுத்தனுப்பி இருக்காங்க... விட்டா அக்காவை இன்னிக்கே அவங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிருப்பாங்க" என்றாள் பாவனா.

கமலம்மாவின் முகத்தில் சந்தோஷம் அடக்க முடியவில்லை.

"அது என்னடா இன்னொரு பை?"

"அது அக்காவைக் கேளு"

"அது ஒண்ணும் இல்லம்மா... அத்தைக்கு பெண் குழந்தைங்கன்னா ரொம்ப பிடிக்குமாம். அதனால அந்த பையில ஹேர்பின், கிளிப்ஸ், எனக்கு எல்லாம் மேட்சிங் அலங்காரம், மேக்கப் செட் எல்லாம் இருக்கு." அவள் முகத்திலும் சந்தோஷம் பொங்கி வழிந்தது.

அவள் சரவணனின் தாயை அத்தை என்று குறிப்பிட்டதும், கமலம்மாவின் மனம் குளிர்ந்து போனது. கண்களில் பெருகி வரும் ஆனந்தக் கண்ணீரை அடக்க முடியாமல்,

"இதையெல்லாம் பார்க்க..." என்று ஆரம்பிக்க,

"எங்க அப்பா உயிரோட இல்லையே" என்று குழந்தைகள் கோரஸாக முடிக்க... அங்கே சிரிப்பும், கலகலப்பும் நடுராத்திரியிலும் தொடர்ந்தது.

* * * *



## 16

காலையில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த தாத்தா, கார்த்திக் எழுந்து வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும்,

"எல்லாரும் வாங்க... கார்த்திக் எழுந்து வந்தாச்சு..." என்று அனைவரையும் அழைத்தார்.

"என்ன தாத்தா ராஜா பராக், பராக்னு கட்டியம் சொல்றீங்க. நா இப்பதானே எழுந்து வரேன்"

அதற்குள் எல்லாரும் அங்கே வந்து விட்டனர்.

"என்னடா... கனவுல அந்தப் பொண்ணு வந்தாளா?" என்றாள் அம்மா.

"அட போம்மா... கனவாவது ஒண்ணாவது..."

"ஐயோ அப்ப வரலையா? முருகா என்னை ஏமாத்திட்டியே" என்று பாட்டி அங்கலாய்த்தார்.

"அம்மா... தூங்கினாத்தானம்மா கனவு வரும்... நான்தான் தூங்கவே இல்லையே..."

அதற்குள் ராமேஸ்வரன், "கார்த்திக் விளையாடாது சொல்லு. என்ன முடிவு செஞ்சிருக்க?" என்றார்.

"அப்பா எனக்கு அவளை கொஞ்ச நாளாத்தான் தெரியும். நேத்திக்குத்தான் அவ முழுக்கதையும் தெரிஞ்சது."

"என்ன கதை?"

ஜெகதீஷிடமிருந்து தான் கேள்விப்பட்ட விஷயத்தை அவன் முழுவதும் சொன்னதும் தாத்தாவும், பாட்டியும் மிகவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தனர்.

பாட்டி "இந்த சின்ன வயசுல இப்படியெல்லாம் கஷ்டமா அந்த பொண்ணுக்கு... அவளை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வாடா... இல்லன்னா நா உங்க ஆஸ்பத்திரிக்கு வந்து அவளை பார்க்கறேன்" என்றார்.

"கார்த்திம்மா... உனக்கு அவளை பிடிச்சிருக்கா... உன் மனசுல இருப்பது காதலா, இல்ல இரக்கமான்னு தெரிஞ்சுக்கோ... அவளோட கதையை இன்னும் கொஞ்சம் தீர விசாரிக்கணும்..." என்று சொன்னாள் அம்மா.

"கார்த்திக்... முடிஞ்சா நீ அந்த ஜெகதீஷை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வா... நீ எல்லாம் யோசிச்சுத்தான் முடிவெடுத்திருப்ப. அவசரப்படுபவனே இல்ல நீ... அதனால இது உணர்ச்சிவசப்பட்டு எடுத்த முடிவா எனக்கு தெரியலை... அம்மா சொன்ன மாதிரி முதல்ல நாம விசாரிப்போம். அப்புறம் மேல ப்ரொசீட் பண்ணலாம்" என்றார் அப்பாவும்.

பாட்டி விடாமல், "நீ இன்னிக்கு அவளை இங்க கூட்டி வரியா, இல்ல நா வந்து அவளை பார்க்கட்டுமா?" என்று கூற,

"ஐயோ பாட்டி... கொஞ்சம் இருங்க. நானே கூட்டிட்டு வரேன். இப்ப எனக்கு டிபன் குடுக்கறீங்களா? எனக்கு நேரம் ஆச்சு" என்று அந்த பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான் கார்த்திக்.

* * * *

மருத்துவமனையை அடைந்ததும், அவனுக்கு உடனே சுஜிதாவை பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஆனால் அடுத்தடுத்து குழந்தைகளை பரிசோதிக்க வேண்டி இருந்ததால், அவனால் பன்னிரெண்டு மணி வரை அங்கே முடியவில்லை. ஒரு வழியாக வேலையை முடித்து அவளைப் பார்க்க செல்லும்போது, அவன் அறையை நோக்கி சுஜிதா, சுந்தரிபாட்டியின் கையைப் பிடித்து அழைத்து வந்துக் கொண்டு இருந்தாள்.

"பாட்டி என்ன இங்க? மிஸ் சுஜிதா... நீங்க எங்க இவங்களை பார்த்தீங்க?"

பாட்டி நமட்டு சிரிப்புடன், "எனக்கு கொஞ்சம் தலை சுத்தலா இருந்தது கார்த்தி... அதனால பிரஷர் செக் பண்ணிக்க வந்தேன். அங்க இந்தப் பொண்ணை பார்த்தேன். கொஞ்சம் கையைப் பிடிச்சு உன் ரூமுக்கு கொண்டு விட சொன்னேன். ரொம்ப நல்ல பொண்ணுடா" என்று கூறி, சுஜிதா பார்க்காத சமயமாக கண் சிமிட்டினாள் பாட்டி.

கார்த்திக்குக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை. அடக்கிக் கொண்டு "பாட்டி இப்ப தேவலையா? ரொம்ப தாங்க்ஸ் சுஜிதா" என்றான்.

"பரவாயில்லை சார்... இது என் கடமை. நா வரட்டுமா பாட்டி?" என்று கேட்டாள் சுஜிதா.

"இரும்மா... கார்த்தி எனக்கு இப்ப வீட்டுக்கு போகணும்... கூட சுஜிதாவை அனுப்பறியா? காரில போயிட்டு திரும்ப வந்துடட்டும்."

"ஏன் பாட்டி, டிரைவர்தான் இருக்காரே. இல்ல கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. நா கூட்டிட்டு போறேன்."

"இல்லடா... எனக்கு இப்பவே போகணும்.

கொஞ்சம் இந்த பொண்ணை வரச் சொல்லு என்னை வீட்டுல இறக்கிவிட்டுவிடட்டுமே."

"பாட்டி, அவங்களுக்கு ஏதாவது வேலை..."

"பரவாயில்லை சார்... நா சாருகிட்ட சொல்லிட்டு கூட்டிட்டு போறேன். லஞ்ச் டைம் முடியறதுக்குள்ள வந்துடுறேன். உங்க வீடு பக்கத்துலதானே சார்" என்று சாரதாவை போனில் அழைத்து விவரம் சொன்னாள்.

கார்த்திக்கை பார்த்து ரகசியமாக தம்ஸ் அப் சைகையை காட்டினார் பாட்டி.

கார்த்திக்குக்கு சுசிதாவை தனியாக தன் வீட்டுக்கு அனுப்புகிறோமே என்று கொஞ்சம் கலக்கம். அதை புரிந்துக் கொண்ட பாட்டி, "நீ கவலைப்படாதே கார்த்தி.. அவளை நல்லபடியா சீக்கிரமே அனுப்பிடறேன்... வாம்மா சுசி" என்று அவளுடன் நீண்ட நாட்கள் பழகியவர் போல அவளின் கையைப் பிடித்தபடி சென்றார்.

அவனுக்கு ஏதோ கனவு போல தோன்றியது. அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு இருந்தவன், திடீரென்று நினைவு வந்தவனாக வீட்டிற்கு போன் செய்து அம்மாவிடம் விவரத்தை சொன்னான்.

* * * *

**17**

கார்த்திக்கின் வீடு மருத்துவமனையிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. காரிலிருந்து இறங்கும் போதே அமிர்தமும் மகாலிங்கமும் வாசலுக்கே வந்து விட்டனர். சுசிதா, பாட்டியை கையைப் பிடித்து அழைத்து வர,

"அமிர்தா, இவதான் சுசிதா... நம்ம கார்த்திக் ஆஸ்பத்திரில வேலை செய்யறா. சுசிதா இது கார்த்திக்கின் அம்மா அமிர்தா, இது தாத்தா" என்றார் பாட்டி.

சுசிதா தன் வழக்கப்படி அமிர்தத்தின் பாதங்களையும், தாத்தாவின் பாதங்களையும் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு, "நமஸ்தே" என்றவள்.

அமிர்தாவைப் பார்த்து அப்படியே அசந்துப் போனாள். டாக்டர் கார்த்திக்கின் அக்கா என்று சொல்வதைப் போல கார்த்திக்கின் முக ஜாடையில், இளமையாக இருந்தாள். அவள் சுசிதாவை பார்த்தவுடன் சிநேகப் பார்வையுடன் புன்னகைத்தது சுசிதாவுக்கு ஏதோ ஒரு மன நிம்மதியை தந்தது.

வானத்தில் இருந்து இறங்கி வந்த ஒரு தேவதையை போல இருந்த சுசிதாவின் அழகில் ஸ்தம்பித்து நின்ற அமிர்தா சுதாரித்துக் கொண்டு, "வாம்மா... அத்தையை கூட்டிட்டு வந்ததுக்கு ரொம்ப நன்றி. உள்ள வா" என்று அழைத்துச் சென்றாள்.

தாத்தா, "என்னம்மா பாட்டி படுத்திட்டாங்களா?" என்றார்.

அவரை எப்படி அழைப்பது என்று தெரியாமல், "இல்ல... தாத்... சார்" என தடுமாறினாள் சுசிதா.

"என்னை தாத்தான்னே கூப்பிடு... நீ வடநாட்டு பொண்ணு மாதிரி இருக்க... ஆனா நல்லா தமிழ் பேசறியேம்மா?"

"இங்க வந்து நாலஞ்சு மாசம் ஆயாச்சு. தவிர எனக்கு ஏற்கனவே என் ப்ரெண்ட் தமிழ் சொல்லிக் குடுத்திருந்தா"

"உன் ஊர் எதும்மா? அம்மா, அப்பா..."

உலகின்
4-வது பெரிய கடலாக
வர்ணிக்கப்பட்டது ஆரல் கடல்.
இந்த கடலுக்குள் அமுடரியா, ஸைடரியா
என்ற ஆறுகள் கலந்து வந்தன. திடீரென இந்த
ஆறுகளின் தண்ணீர் சோவியத் ரஷியாவுக்கு
திருப்பி விடப்பட்டு விவசாய நிலங்களுக்கு தண்ணீர்
முழுமையாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இதனால்
கடலுக்குள் செல்லும் நீர் தடைபட்டது.

இதன் காரணமாக 1960 முதல் இந்த கடல் வற்றத் தொடங்கியது. 2004-ல் இந்த கடலின் 25 சதவீதம் சுருங்கிப் போனது. கடல்நீர் வற்றிப் போனதால், அந்த பகுதி உப்பளம் ஆகிவிட்டது. கடல்நீர் உயிர் இனங்கள், மீன் இனங்கள் அழிந்து விட்டன.

ஒரு காலத்தில் மீன் உற்பத்தியும், மீன் வியாபாரமும் கொடிகட்டிப் பறந்த இந்த இடத்தில் அதற்கான தடயமே இப்போது இல்லை. கடற்கரையோரம் முன்பிருந்த மீன் நகரங்கள் இப்போது படகுதுறைகளாக மாறிவிட்டன.

கடல் வற்றாது என்பார்கள். ஆனால் வற்றி விட்டதே. எல்லாம் காலம் செய்யும் கோலம்தான்.

- திருமகள்.




ஒரு நிமிடம் தயங்கியவள் அமிர்தாவிடம் பொய் சொல்ல மனது வராமல், "என் ஊர் மும்பை தாத்தா... நா இங்க தனியாதான் இருக்கேன். அப்பா இல்ல... அம்மா ஊருல இருக்காங்க..." என்றாள்.

அவள் உண்மையை சொன்னது அமிர்தாவுக்கும் பிடித்திருந்தது.

உள்ளே வந்ததும், அந்த வீட்டில் எல்லாம் மிக எளிமையாக, ஆனால் நல்ல நேர்த்தியுடன் இருந்தது சுசிதாவின் மனதை கவர்ந்தது.

அவள் சோபாவில் அமர்ந்ததும் அமிர்தா அவளுக்கு குளிர்பானம் தந்தார்.

"நீ படிச்சதெல்லாம் எங்கம்மா?" என்று சுசிதாவிடம் மகாலிங்கம் கேட்க,

"மும்பையில்தான் தாத்தா... ஹாஸ்பிடல் மேனேஜ்மெண்ட் படிச்சேன். இங்க வேலை கெடைச்சதும் வந்துட்டேன்" என்றாள்.

அதற்குள் பாட்டி "வா சுசி... வீட்டை சுத்திக் காட்டறேன்" என்றார்.

அவர் சொல்வதை மறுக்கவும் முடியாமல், ஆனால் நேரம் ஆகிவிடுமோ என்ற கவலையில், "இல்ல பாட்டி, நா இன்னொரு நாள் வரேன்" என்றாள்.

"ஏன் கார்த்திக்கிட்ட பயமா இருக்கா? அதெல்லாம் கவலைப்படாதே. அவன் ஒண்ணும் சொல்ல மாட்டான். அவனுக்கு என்னை கண்டா பயம்... நீ வா" என்று ஒரு குழந்தையைப் போன்று உற்சாகத்துடன் வீட்டை சுற்றிக் காட்டினார்கள் தாத்தாவும், பாட்டியும்.

அவர்கள் வீடு, ஒரு டாக்டர் வீடு என்பதற்கு ஏற்றது போல எங்கும், எதிலும் சுத்தம். வீட்டின் பின்னால், ஒரு தோட்டம். அங்கே வேப்ப மரத்துக்கு அருகில் ஒரு ஊஞ்சல்.

"வேப்பங்காத்து பட்டா உடம்புக்கு நல்லது" என்றார் பாட்டி.

ஒரு சிறிய ரோஜா தோட்டம். அங்கே இருந்த ரோஜா செடியில் பூத்திருந்த ஒரு ரோஜா மலரைப் பறித்து தாத்தா சுசிதாவிடம் கொடுத்து, "தலையில வச்சிக்கோம்மா" என்றார்.

"ஆஹா சுசி.. இன்னிக்கு இதுவுடன் கூடிய மனசுதான். தாத்தாகிட்ட சாமிக்கு வேணும்னு ஒரு பூ கேட்டா கூட கடையிலிருந்து வாங்கிக்கோன்னு சொல்லுவார். இதுவரைக்கும் ஒரு பூ பறிச்சதில்ல இதுவரைக்கும்" என்று அங்கலாய்த்தாள்.

"பூ செடியில இருந்தாதான் அழகு. எனக்கு அதுதான் ரொம்பப் பிடிக்கும். ஆனா, எல்லாத்துக்கும் ஒரு அதிர்ஷ்டம் வேணு மில்ல... எனக்கு சுசிதாவை பார்த்தா, ஏதோ மகாலட்சுமி நம்ம வீட்டுக்கு வந்துட்டாப் போல தோணுது. சரி, நீ வாம்மா உள்ள போகலாம்" என்று அழைத்து சென்றார்.

அங்கே பூஜை அறையை பார்த்து கண்களை மூடி ஒரு நிமிடம் சுசிதா நின்று விட்டாள். அப்படி ஒரு தெய்வீகம் அந்த அறையில். அங்கே எரிந்துக் கொண்டிருந்த குத்துவிளக்கில், எண்ணெய் குறைந்து வருவதைப் பார்த்து தன்னையும் அறியாமல், அதன் அருகில் இருந்த கிண்ணத்தில் இருந்து எண்ணெய் எடுத்து ஊற்றியவள், திடீரென்று தான் இருக்கும் இடத்தை உணர்ந்தாள்.

"சாரி... நான் பாட்டிக்கு ஏதோ ஞாபகத்துல..." என்று மன்னிப்பு கேட்க, மகாலிங்கம் "இதுக்கு எதுக்கு சாரி... உன்னை மகாலட்சுமின்னு சொன்னேன்... இப்ப மகாலட்சுமியே வீட்டுல விளக்கேத்த, நாங்க என்னோ கொடுத்து வச்சிருக்கணும்" என்று

விளக்கெடுத்து போல இருந்தது.

"பரவாயில்லை அண்ணா. எப்படியும் ஒருத்தன் தெரிஞ்சதான் போறது... இன்னிக்கு ராத்திரி நா மாலினிகிட்டயும் அம்மாகிட்டயும் எல்லா விஷயத்தையும் சொல்லிட்டுப் போறேன். என்ன ஆனாலும் சரி. நா வரேன் அண்ணா... நேர மாறுது. இன்னிக்கு மாலினி நிச்சயதார்த்தம்... நா சீக்கிரமே வீட்டுக்கு போகணும்" என்று தன் வேலையை கவனிக்கச் சென்றான்.

* * * *

20

புதன்கிழமை. சரவணனின் வீட்டில் சொல்லியபடி, சரியாக நான்கு மணிக்கு ஒரு மினி வேன் அனுப்பி இருந்தார்கள். பெசன்ட் நகரில் இருந்த சரவணனின் பங்களா ரொம்ப பெரியதாக இருந்தது. வாசலடைத்து பெரிய கோலம், வாழை மரம், மாவிலைத் தோரணம், நாதஸ்வரம், சீரியல் விளக்குகள் என்று ஏதோ ஒரு கல்யாண மண்டபத்தைப் போல இருந்தது.

சரவணனின் தாயார் மீனாட்சியும், அவரது சிநேகிதியும் மாலினிக்கு ஆரத்தி சுற்றி அவளை வீட்டுக்குள் அழைத்துப் போனார்கள். தன் வலது காலை அந்த வீட்டில் வைத்து நுழைந்த மாலினி, நடப்பது கனவா, நனவா என்று தன்னை கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

"வாங்க மாலினி" என்று சரவணன் அழைக்க, அவனை நிமிர்ந்துப் பார்த்தாள். சரிகை வேட்டி, சட்டையும் நெற்றியில் விபூதியுமாக [illegible] இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

எல்லோரும் அவளை "என்ன... வாங்க மாலினியா?" என்று கேட்டு, மீனாட்சியும், "ஏண்டா சரவணா... உனக்குப்போ ஒரு தடவைக் கூட, விளையாட்டுக்குக் கூட என்னை இப்படி கூப்பிட்டதில்லையடா?" என்று பிள்ளையை சீண்டினார்.

ஒரே கேலியும் கிண்டலுமாக ஆரம்பித்தது நிச்சயதார்த்தம். அதை நிச்சயதார்த்தம் என்றே சொல்ல முடியாது. ஒரு சின்ன கல்யாணம்தான். ஏற்பாடுகள், உணவு, நாதஸ்வரம், மாலை எல்லாம் பிரம்மாண்டமாக ஏற்பாடு





செய்திருந்தனர் சரவணன் குடும்பத்தினர்.

வீட்டின் பெரிய ஹாலில், மணமேடையைப் போல அலங்கரிக்கப்பட்டிருந்த இடத்தில், மாலினியையும் சரவணனையும் உட்கார வைத்தனர். அவர்கள் வாங்கி வந்திருந்த விலையுயர்ந்த தங்கநிற பட்டுப் புடவையில், மாலினியே தங்கம் போல மின்னினாள். அவர்கள் மாலினிக்கு புடவை, நகை என்று பரிசு மழை பொழிந்தனர். மாலினிக்கு தங்கள் குடும்ப நகைகளை அணிவித்து, அவளை அன்றே ஏறக்குறைய அவர்கள் வீட்டு மருமகள் ஆக்கிவிட்டார்கள் என்று சொல்லலாம்.

கமலம்மாவிற்கு ஆனந்தத்தில் கண்களில் நீர் பெருகியது. மாலினிக்கும் யாருக்கு நன்றி சொல்வது என்று ஒரே குழப்பம். இந்த திருமணத்திற்கு வழிகாட்டிய ஜட்ஜ் அங்கிளுக்கா, தன்னை சம்மதிக்க வைத்த தன் அன்பு தோழி கீதாவிற்கா அல்லது தன்னை தங்கள் குடும்பத்தில் ஏற்றுக் கொண்ட சரவணனுக்கும், அவன் குடும்பத்தினருக்குமா... அவள் உணர்ச்சி மேலிட்டிருந்தாள். ஏதோ ஒரு மயக்க நிலையில் இருந்த அவள், இன்ப வானில் பறந்து கொண்டிருந்தாள்.

மாலினி இருக்கும் வீட்டின் குடித்தனக்காரர்களில் முக்கால்வாசிப் பேர் வந்திருந்து ஒரே தடபுடல் அமர்க்களம்தான்... கமலம்மாவும் சரவணனுக்கு வேஷ்டி, சட்டையுடன், ஒரு மோதிரத்தையும், தன்னால் முடிந்த சீர்பட்சணங்களை கொண்டு வைத்து, பொண்ணை வைக்கும் இடத்தினிலே பூவை வைத்து நிறைத்து விட்டாள். மாலினி குடும்பத்தை அத்தனை சந்தோஷமாக, யாரும் அதுவரை பார்த்தது கிடையாது.

மாலினி குடும்பமும், மற்ற குடும்பத்தினரும் தங்களை விட பண வசதியில் குறைந்தவர்கள் என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்படாத வகையில், சரவணனின் குடும்பத்தினர் அவர்களை வரவேற்று உபசரித்த விதம், அவர்கள் மீது இருந்த மரியாதையை மேலும் உயர்த்தியது. மாணிக்கம் அய்யாவாலும், சிவகாமி அம்மாவாலும் தங்கள் சந்தோஷத்தை மறைத்துக் கொள்ள முடியவில்லை. மாலினியை, எப்போதும் அவர்கள் தங்கள் மகளைப் போல நினைப்பதால், மிகவும் உற்சாகமாக நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் ஒன்றி இருந்தார்கள்.

கீதாவும் பெண் வீடு, பிள்ளை வீடு என்று இரு தரப்புக்குமாக ஓடியாடி, வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு மாலினிக்கு இதுபோல நல்ல வாழ்க்கை கிடைப்பதை எண்ணி அளவு கடந்த சந்தோஷம். அதுமட்டுமில்லாமல் அப்போது அங்கே வந்த கார்த்திக்கின் பெற்றோரை பார்த்து கீதா குழம்பிப் போனாள். அவர்கள் சரவணன் குடும்பத்துக்கு தெரிந்தவர்களைப் போல தோன்றியது. அவள் கண்கள் அவளையும் அறியாமல் கார்த்திக்கை தேடுவதைப் புரிந்த அமிர்தா,

“என்ன கீ... கார்த்திக்கை தேடறியா.. அவனுக்கு இன்னிக்கு ஏதோ முக்கிய மீட்டிங்காம். அதான் வரலை” என்று சொல்ல,

கீதா அசடு வழிந்து, “இல்ல ஆன்ட்டி... பாட்டி, தாத்தா வரலையான்னு பார்த்தேன்” என்று சமாளித்தாள்.

அமிர்தாவும் ராமேஸ்வரனும் ஒருவரை ஒருவர் பார்த்து நமட்டு சிரிப்பு சிரித்துக் கொண்டனர். எல்லாம் நல்லபடியாக முடிந்து அனைவரும் மனநிறைவுடன், அவரவர் வீடு திரும்பினர்.

* * * *

## 21

வீட்டிற்கு வந்தும் கமலம்மா, கீதாவின் கைகளைப் பற்றிக் கொண்டு,

“கண்ணம்மா நீ தேவதை போல எங்க வீட்டுக்கு வந்தடா... அப்படியே ஆகாயத்துலருந்து குதிச்ச மாதிரி. நீ மட்டும் மாலினியை சம்மதிக்க வைக்கலைன்னா, இந்த சந்தோஷத்தையெல்லாம் நா பாத்திருக்க முடியாது. நீ வந்ததுலருந்து எல்லாம் நல்லதாத்தான்டா நடக்குது. நீ நிச்சயமா போன ஜென்மத்துல என் பொண்ணாத்தான் பிறந்திருப்பே” என்று கண்களில் நீர்மல்க கீதாவை ஆரத் தழுவிக் கொண்டாள்.

கீதாவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். இவர்கள் அன்று நினைத்து அடைக்கலம் தராமல் அனுப்பி இருந்தால், தன் கதி? நினைக்கவே நடுங்கியது நெஞ்சம். அவர்களின் பெருந்தன்மைக்கு முன் தான் செய்தது ஒன்றுமே இல்லை என்று எண்ணினாள்.

“அம்மா... நா ஒண்ணுமே செய்யல. இதெல்லாம் நடக்கணும்னு இருக்கு... நா இங்க இல்லாம இருந்திருந்தாலும் சரவணனுக்குத்தான் மாலினின்னு இருந்தா, அது எப்படியாவது நடந்திருக்கும்.”

“இல்ல கீ... நீ எப்படி வேணா சொல்லிக்கோ... நீ தேவதைதான்”

“அம்மா, இந்த தேவதைக்கிட்ட ஒரு கதை இருக்கு சொல்லவா.”

“சொல்லும்மா... மாலினி ஏற்கனவே சொன்னா... நீ எதைப் பத்தியும் கவலைப் படாதே... உன் கதை எப்படி இருந்தாலும் உன்னை பத்தின எங்க எண்ணம் மாறப் போறதில்லை. இதை சொல்றதனால உன் மனசு பாரம் குறையுமனா... சொல்லும்மா.”

மாலினியும், “சொல்லு கீ... எங்கே நீ எப்பவும் என் கீதாதான்... அதுல ஒரு மாறுதலும் கிடையாது” என்றாள்.

கீதா சொல்ல ஆரம்பித்தாள்.

“எங்கம்மா சின்ன வயசுல ஏன் இப்பக் கூட ரொம்ப அழகா இருப்பாங்க. அவங்களுக்கு சினிமால நடிக்கணும்னு ஆசை. சின்ன சின்ன ரோல் செஞ்சிருக்காங்க. எங்கப்பாக்கு இதெல்லாம் பிடிக்கல. அவர் எனக்கு மூணு வயசா இருக்கும் போது எங்களை விட்டுட்டு டெல்லிக்கு போயிட்டாரு. இப்ப அவர் எங்க இருக்காருன்னு கூடத் தெரியாது. என்னை வளர்க்க எங்கம்மா ரொம்ப கஷ்டப்பட்டாங்க. மும்பை போன்ற நகரத்துல விலைவாசி அதிகம். எங்கம்மாக்கு யாரும் ஆதரவு இல்ல. அப்ப அங்க ஷூட்டிங் போது மதிய சாப்பாடு சப்ளை செஞ்சுகிட்டிருந்த ஷெட்டி அண்ணா... நாங்க அவரை அப்படித்தான் கூப்பிடுவோம். எங்கம்மா மேல இரக்கப்பட்டு, எனக்கும் சேர்த்து சாப்பாடு குடுப்பார். அவருக்கு கல்யாணம் ஆகி குழந்தைகள் இருந்தாங்க. அவர் ஒரு ஓட்டல் வேற நடத்தி வந்தார். ஒரு முறை எங்கம்மா வீட்டு வாடகை குடுக்க முடியாமல், வீட்டு சொந்தக்காரர் எங்கள் பெட்டி படுக்கையை தெருவில் வீச, எங்களை ஷெட்டி அண்ணாதான் கூட்டிட்டு போயி எங்கம்மாவை அவரோ... அவரோ... அவரோ...” என்று அழத் தொடங்கினாள்.

“வேண்டாம் கீ... கஷ்டமா இருந்தா சொல்லாதே... போனா விடு” என்றாள் மாலினி.

“இல்லை மாலினி... நா இன்னிக்கு சொல்லியே ஆகணும். இத்தனை நாள் நீங்க கேக்காம இருந்தது உங்க பெருந்தன்மை.”

“அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா... அது அவசியமாப்படலை... அதனால கேக்கல” என்றார் கமலம்மா.

“இல்லம்மா... இப்பக்கூட இதை சொல்லலன்னா எனக்கு நிம்மதி இருக்காது...” என்று கண்களைத் துடைத்தபடி மேலே தொடர்ந்தாள். “அம்மாவை அவரோட சின்னவீடாக்கிட்டார். என்னை நல்லா... ரொம்ப நல்லா தன் மக மாதிரித்தான் பாத்துக்கிட்டார். அவருக்கு ரெண்டும் பிள்ளைகள்தான். என்னை படிக்க வச்சார். நா அவரை அப்பான்னு கூப்பிட்டதில்லையே தவிர அவர் எனக்கு அப்பா மாதிரித்தான் இருந்தார். அவரோட பெரிய மகன் பிரதாப்புக்கு கெட்ட பழக்கங்கள் அதிகம். அவனுக்கு கல்யாணம் ஆயிருக்க, ஆனா அவன் எங்களை பத்தி தெரிஞ்சுகிட்டு என்னை அவனோட சின்ன வீடா இருக்க வைக்க சொல்லி எங்கம்மாவையும், ஷெட்டி அண்ணாவையும் வற்புறுத்தினான். எவ்வளவோ சொல்லிப் பாத்தாங்க... அவன் ஷெட்டி அண்ணாகிட்ட எங்களைப் பத்தி தன் அம்மா அதாவது அவரோட மனைவிகிட்ட சொல்லிடுவேன்னு மிரட்டினான். அவங்க இதய நோயாளி... அதனால ஷெட்டி அண்ணா, எங்கம்மாவையும் வற்புறுத்தி சம்மதிக்க வச்சு, என்னை அவனுக்கு ரெண்டாவதா கல்யாணம் செய்ய வைக்கிறதா முடிவு பண்ணிட்டாங்க.. நா என்ன சொல்லியும் அவங்க கேக்கல...

அதனால நா வேற வழியில்லாமல், கடல்ல மூழ்கப் போறதா லெட்டர் எழுதி வச்சிட்டு கிளம்பிட்டேன். ஆனா அப்புறம் அந்த எண்ணத்தை மாத்திகிட்டு நாமும் சுதந்திரமா வாழலாம்னு முடிவெடுத்து அங்க இருந்து சென்னைக்கு வந்துட்டேன். நா வேற என்ன செய்ய முடியும் சொல்லுங்கம்மா?” என்று கதறி அழ, கமலம்மா அவளை அப்படியே தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

மாலினியும் தன் கண்களில் இருந்து வழியும் நீரை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தாள்.

தனக்கும் அப்பா இல்லாமல் இருந்தும், அம்மா தன்னுடன் சேர்த்து தன் தம்பி, தங்கை களையும் எப்படி நல்ல முறையில் கரை சேர்த்திருக்கிறார் என்று எண்ணம் அவளுக்கு ஏற்பட தன் அன்னையின் மீது மதிப்பு கூடியது. பாலகனும், தங்கினியும், ஜானகினியும் அப்படியே திகைத்து போயிருந்தனர்.

"சரி அழாதே... ப்ளீஸ்... நாங்க இல்லையா உனக்கு... அதுக்குத்தான் உன்னுடைய கதையை சொல்ல வேண்டாம்னு நான் சொன்னேன்."

அப்போதுதான் தான் செய்த தவறை உணர்ந்தவள்,

"ரொம்ப சாரி, சாரிம்மா... சாரி மாது, சாரி பாலு, சாரி அன்னு மூன்னு... எல்லாரும் சந்தோஷமா இருக்கும் இந்த சமயத்துல... எல்லாம் என் தப்பு... இந்த நல்ல நாளை நா சொல்லியிருக்கக்கூடாது" என்று தன் கண்களை துடைத்துக் கொண்டாள்.

"சரி, இப்ப தூங்கு... நாளைக்கு ஆபீசுக்கு போகணும்.. கல்யாண வேலை வேற மலை போல இருக்கு" என்று தோழியை சமா தானப்படுத்தி தூங்க வைத்தவள், 'பாவம், இந்த சின்ன வயசுல வாழ்க்கையில எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கா. நமக்கு பணம்தான் பிரச்சினை... ஆனா ஆதரவா அம்மா, குடும்பம், நண்பர்கள்னு எத்தனை பேர் இருந்திருக்காங்க. எத்தனை நாள் இவ்வளவு கஷ்டத்தை தாங்கிகிட்டு இருந்திருக்கா' என்று சசிதாவை ஆதரவாய் அணைத்துக் கொண்டாள் மாலினி.

■ ■ ■ ■

22

மறுநாள் வழக்கம் போல குளித்து, கமலம்மா வீட்டில் டிபன் சாப்பிட்டு விட்டு அவளும் மாலினியும் வேலைக்கு கிளம்ப தயாரானார்கள்.

அப்போது வாசலில், "மிஸ் சசிதா வீடு..." என்று குரல் கேட்டது.

"இதோ" என்று அவர்களை அழைத்து வந்து காட்டினாள் புவனா.

சசிதா ஆச்சரியம் தாங்காமல், "அரே ஜெகதீஷ்பையா... அட டாக்டர் கார்த்திக்கா... தாத்தா, பாட்டி, ஆன்ட்டி, அங்கிள்? நமஸ்தே நமஸ்தே" என, அதற்கு ராமேஸ்வரன்,

"ஆன்ட்டி, அங்கிள் இல்லை... அத்தை, மாமா" என்றார்.

சசிதா அவர்களுக்கு மாலினி குடும்பத்தை அறிமுகப்படுத்தினாள். கமலம்மாவும், மாலினியும் அவர்கள் எல்லோரையும் வர வேற்று, உட்கார வைத்து காபி பரிமாறினர்.

ஜெகதீஷ் மாலினியைப் பார்த்து இந்தியில், "பெஹன் (சகோதரி) எங்க பீபிக்கு ஆதரவு குடுத்ததுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல. நீங்க அப்படி செய்யலைன்னா இந்த புது ஊர்ல அது என்ன செஞ்சிருக்கும்? பஹுத் ஷுக்ரியா (ரொம்ப நன்றி)" என்றான்.

மாலினியும் அவனிடம் இந்தியில், "சசி மாதிரி நல்ல பொண்ணுக்கு எப்பவும் உதவ யாராவது கடவுள் அனுப்புவாரு. அவ இங்க வந்தது, நாங்க செஞ்ச அதிர்ஷ்டம்" என்றாள்.

கார்த்திக் குடும்பம் அங்கே ஏன் வந்தது



உணவு கட்டுப்பாடு

உடல் எடையைக் குறைக்கிறீர்களா?

அதிக உணவு உட்கொள்வதால்தான் உடல் எடை கூடி விடுகிறது என்று நாம் நினைக்கிறோம். உணவின் அளவைக் கட்டுப்படுத்தினால், நமது உடல் எடை குறைந்து விடும். உருவத்திலும் அழகு கூடிவிடும் என்று நம்புகிறோம்.

இந்த இரண்டு எண்ணமே தவறு என்பதை சமீபத்திய ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உணவில் கலோரி அளவு குறையும்போது உடல் எடை குறையும் என்றும், உடலுக்கு தேவையான கலோரி அளவை தாண்டும்போது அது உடல் எடையை அதிகரிக்கும் என்பதும் மருத்துவ ரீதியான உண்மை என்றாலும், கலோரி அளவு உடல் எடையை கூட்டவோ குறைக்கவோ செய்யாது என்பதும் இந்த ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அடிக்கடி கொறிக்கிற நொறுக்குத் தீனிதான் உடல் எடை அதிகரிப்புக்கு காரணம் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர்த்து தினமும் உரிய நேரத்தில் உணவை சாப்பிட்டாலே, உடல் எடை கட்டுப் பாட்டுக்குள் இருக்கும். இதை உணராமல்



உடல் எடையைக் குறைத்துக் கொள்ள உணவை கட்டுப்படுத்த தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை உணவை உரிய நேரத்துக்கு முன்னமே சாப்பிட்டால், உடல் எடையை பாதுகாக்க முடியும். வீட்டு சாப்பாடும் உரிய பலன் தரும் என்றும் இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

-ராதா.

என்று அவர்கள் எல்லோரும் வியந்து நிற்க, கார்த்திக் சசிதாவிடம்,

"சசிதா... ஜெகதீஷ் உங்க அண்ணாதானே?" என்றான்.

"ஆமாம் சார்"

கார்த்திக் ஜெகதீஷின் கைகளைப் பற்றிக் கொண்டு, "மிஸ்டர் ஜெகதீஷ்... என் பேர் கார்த்திக், நா டாக்டரா ஆஸ்பத்திரில டாக்டரா இருக்கேன்... இது என் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி... நீங்க உங்க தங்கச்சி சசிதாவை எனக்கு கல்யாணம் செஞ்சுக் குடுப்பீங்களா? அவளை வாழ்நாள் முழுக்க கண் கலங்காம பாத்துக்க வேண்டியது என் பொறுப்பு" என்று கேட்க,

சுந்தரி பாட்டியும், கமலம்மாவிடம், "ஆமாம்மா... நீங்க உங்க பொண்ணு சசிதாவை எங்க வீட்டுக்கு மருமகளா அனுப்பணும். மறுப்பு சொல்லக் கூடாது" என்று சொல்ல, அபிராமியும் வெற்றிலை பாக்குத் தட்டை எடுத்து நீட்டினாள்.

"டாக்டர்... என்னைப் பத்தி" என்று சசிதா இழுக்க,

"அதெல்லாம் விவரமா ஜெகதீஷ் என்கிட்ட சொல்லிட்டார், உனக்கு சம்மதமா சொல்லு?" என்றான் கார்த்திக்.

சசிதா மாலினியை பார்த்தாள். மாலினி அவளருகில் வந்து, "சொல்லு சசி... எதுக்கும் கவலைப்படாதே... எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்" என்று தைரியம் கூறினாள்.

ஜெகதீஷ் அவளிடம், "பீபி... உன் கல்யாணத்தை பத்தி கவலைப்படாதே நா பாத்துக்கறேன். உன் கல்யாணம் முடிஞ்சதும் அவங்கிட்ட சொல்லிக்கலாம்... அது என் பொறுப்பு" என்றான்.

கமலம்மா உள்ளே இருந்து எல்லோருக்கும் ஸ்வீட் கொண்டு வந்து கொடுத்தாள்.

ராமேஸ்வரன் அவளிடம், "அம்மா, கல் யாணத்தை மாலினி கல்யாணத்தன்னிக்கே வச்சுக்கலாம். ரெண்டு கல்யாணம் மற்றும் ரிசப்ஷன் செலவு நாங்க ரெண்டு சம்பந்திங்களும் பாத்துக்கறோம். என்ன சொல் றீங்க?" என்றார்.

"ரெண்டு சம்பந்திங்களுமா... சரவணனோட அம்மா, அப்பா இதுக்கு சம்மதிப்பாங்களா?" என்று சந்தேகத்துடன் கேட்க,

அதற்குள் அங்கே திடீர் ஏகாம்பரமும் சரவணன் குடும்பத்தினரும் நுழைந்தனர்.

"ஆமாம் கமலம்... சத்தியமும், ராமேஸ் வரனும் பால்ய நண்பர்கள். அவங்க பிள்ளைகளுக்கும் ஒரே நாளில் மணவிழா கிடைக்கணும்னா அது எவ்வளவு நல்ல விஷயம்" என்றார் ஏகாம்பரம்.

"ஆமாம் கமலம்மா, ராமேஸ்வரன் சொன்ன மாதிரி ரெண்டு கல்யாணமும் ஒரே நாளில நடக்கட்டும்... செலவு முழுக்க எங்களுது. என்ன சரியா ராமேஸ்வரா?" என்று தாத்தா சொல்ல,

"ஆமா... இதுல நான் சொல்ல வேற என்ன இருக்கு?" என்றார் ராமேஸ்வரன்.

உடனே கார்த்திக், "இல்லப்பா... இன்னும் சசிதா சரின்னு சொல்லலையே. என்ன சசி... இன்னும் என்ன தயக்கம். இனி எல் லாம்..." என்று சொல்லி சசிதாவை நெருங்கி அவள் முகத்தை தன் கைகளில் ஏந்த, அவள் வெட்கத்துடன் தலை குனிந்தாள். அதற்குள் ஜானகினியும், தங்கினியும் சேர்ந்து,

"இனி எல்லாம் சுகமே..." என்று பாடினார்கள். அங்கே சிரிப்பலை பரவியது.

(முற்றும்)